www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

மார்ச் - 2004
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00




## தோற்றுத் துவண்டது தமிழகம்

## தூக்கி நிறுத்தினார் மன்மத ராசா !

படிப்பகம்

www.padippakam.com




## வாசகர் கடிதம்

● உதவும் கரங்கள் கட்டுரை என்னை உலுக்கி எடுத்துவிட்டது. சமூகம் அநாதைகளையும் அபலைகளையும் எய்ட்ஸையும் உற்பத்தி செய்கிறது. உற்பத்தியைத் தடுக்காமல் உற்பத்தியினால் விளைந்தவைகளை இரக்கத்துடன் பராமரிப்பது மட்டுமே மனிதாபிமானமல்ல. இடமளிக்க முடியாமல் வெளியேற்றப்பட்ட அல்லது அனுமதி மறுக்கப்பட்டவர்களைப் பற்றி கட்டுரை குறிப்பிடும் இடம் வருகையில் வித்யாகரின் சேவையும் கூட, உள்நோக்கமுள்ளதாக, கேள்விக்குரியதாக, பாசாங்குத்தனமாக ஆகிவிடுகிறது என்பதையும் அவர் பரிசீலிக்க வேண்டும்.

சமூகம் உற்பத்தி செய்யும் அநாதை - அபலைகளை உதவும் கரங்கள் அடிமைகளாகவும், ஏங்கிப் போனவர்களாகவும் உற்பத்தி செய்கிறது. நிதி வழங்குபவர்களின் மனநிலையையும், அதற்காக உதவும் கரங்கள் எவ்வாறெல்லாம் கரம் கூப்புகிறது என்பதையும் பொருத்தமாக எடுத்துரைக்கிறது கட்டுரை. சமூக மாற்றத்திற்கான ஆயுதம் *புதிய கலாச்சாரம்* என்பதை அதன் உள்ளார்ந்த அர்த்தத்தில் ஆழமாக இந்தக் கட்டுரை மீண்டும் நிரூபித்திருக்கிறது.

- குருசாமி மயில்வாகனன்,
சிவகங்கை.

● அரசு பயங்கரவாதமும், ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதமும் தெளிவான தேவையான செய்திக் கட்டுரை. அரசியல் நிர்ணயச் சட்டப்படியே கிரிமினல் குற்றவாளிகளான மோடி முதல் உள்ளூர் சங்கப் பரிவாரக் கேடிகள் வரை ஏன் உள்ளே தள்ளப்படவில்லை? கம்யூனிசம் என்றால் சர்வாதிகாரம், அடக்குமுறை என்று சர்வாதிகாரச் சிந்தனையாளர்கள் பிரச்சாரம் செய்வதை முறியடிக்கும் வகையில் அமைந்துள்ளது ''ஒரு மன்னன் மனிதனான கதை''. கம்யூனிஸ்டுகளைப் போல் வேறு எவரும் உண்மையான மனிதராவது எப்படி என்று கற்றுக் கொடுக்க முடியாது என்று மன்னன் பூ ஈ கூறியதைப் படித்தபோது உள்ளம் சிலிர்த்தது.

- செம்மலர் மா. நடராசன்,
அறந்தாங்கி.

● குஜராத்தில் இந்து மதவெறியர்களின் ஆவணப் படங்கள் மீதான தணிக்கை நடவடிக்கைகள் ஒவ்வொரு துறையிலும் ஆக்டோபஸ் போலப் பற்றிப் படர்ந்து கபளீகரம் செய்து வருவதை உணர வைத்தது. ''ஒரு மன்னன் மனிதனான கதை'' கம்யூனிசம் என்பது ஒரு மனிதன் எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவனானாலும் தன் தவறை உணர்ந்து திருந்தி வாழ வாய்ப்பளிக்கும் மிக உயர்ந்த ஜனநாயக அணுகுமுறை என்பதை நிரூபித்துள்ளது. ஆனால் இதற்கு நேர்மாறாக முதலாளித்துவமே சமூகத்தின் கடைக்கோடியில் இருக்கும் மனிதனைக் கூட குரல்வளையை நெறித்துக் கொல்கிறது.

''நீங்கள் அறியாத செவிலியர்'' கட்டுரை உண்மையில் நான் அறியாத செவிலியர்களை அறிமுகப்படுத்தியது. நண்பர் ஒருவர் அநாதை இல்லத்திற்கு ஆண்டுக்கு ஒருமுறை சில துணிமணிகள், நன்கொடை அளிப்பதோடு திருப்திப்பட்டுக் கொண்டு தன் இயலாமையை வெளிப்படுத்திக் கொள்வார்.

- புரட்சித்தூயன், தருமபுரி.

## அடக்குமுறைக்கு அஞ்சமாட்டோம் அத்வானியே திரும்பிப் போ!

செங்கிஸ்கானுக்கும், தைமூருக்கும் ஆசியா, ஐரோப்பாவை வேட்டையாட குதிரைகளும், வீரர்களும் தேவைப்பட்டனர். ஹிட்லர், முசோலினியின் பாசிச வெறியாட்டத்திற்கு நவீன இராணுவம் பயன்பட்டது. ஆனால் அத்வானிக்கு இவையெதுவும் தேவையிலை. இந்தியாவெங்கும் வெறும் வாகனத்தில் பயணம் செய்தே, எந்த ஆயுதங்களுமின்றியே பல கலவரங்களை நடத்தி பல நூறு முசுலீம்கள் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்ததுதான் அத்வானியின் 'புகழ்' பெற்ற ரத யாத்திரை.

இந்தத் தேர்தலுக்கு தமிழகத்தில் இந்து மதவெறியர்களை அறிமுகப்படுத்திய குமரி மாவட்டத்திலிருந்து யாத்திரை துவங்கி காசுமீர் போகிறதாம். பாசிச ஜெயாவின் தமிழகப் போலீசு காவி வெறியும், அதிகார வெறியும் இணைந்து அத்வானியின் இரத்த வேட்டைக்கான களத்தை பாதுகாப்பு ஏற்பாடு என்ற பெயரில் செய்து வருகின்றன.

இதை எதிர்த்து கோவை மக்களிடையே பிரச்சாரம் செய்த மக்கள் கலை இலக்கியக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் புஷ்பராஜ், இராஜேந்திரன், இராமமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். எமது பிரச்சாரம் என்ன? ''1998-ஆம் ஆண்டுகோவை வந்த அத்வானியால் பெரும் கலவரம் ஏற்பட்டது. கோவையில் மதக்கலவரத்தை அறிமுகம் செய்த பார்ப்பன இந்து மதவெறியர்களுக்குப் பாடைக் கட்டுவோம். அத்வானி வருகையைத் தடை செய்.''

இதை ''பொது இடத்தில் அனுமதியின்றி மைக்குகளை வைத்துக் கொண்டு மதக் கலவரத்தை தூண்டும் வகையிலும், பொது அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையிலும் பிரச்சாரம் செய்ததாக''ப் போலீசு வழக்கு பதிவு செய்துள்ளது. முசுலீம்களை மட்டுமல்ல கோவை போலீசையே அடித்தும் தடுத்தும் ஆதிக்கம் செய்யும் இந்து முன்னணியும், கோவை பாராளுமன்ற பா.ஜ.க. உறுப்பினர் சி.பி. இராதாகிருஷ்ணனும் இன்னும் ஏனைய வானரப் படைகளும் அப்பட்டமாக மதவெறியைத் தூண்டி வரும் வேளையில் அத்வானி இரத யாத்திரை எனும் அணுகுண்டோடு வருகிறார். இவ்வளவு பெரிய அபாயத்தை மக்களிடம் விளக்குவது 'குற்றம்'; அதற்கோர் வழக்கு!

பாசிச ஜெயாவிற்காக வாலாட்டும் கோவை போலீசு ஒன்றைப் புரிந்து கொள்ளட்டும். எத்தனை கைது, வழக்கு வந்தாலும் எமது பிரச்சாரத்தைத் தடை செய்ய முடியாது. உண்மையில் தடை வரவர எமது செயல் வீறுகொண்டு எழும்.

— ம.க.இ.க., கோவை.

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

இதழுடன் (மார்ச்'04) முடியும் சந்தா எண்கள்

4,5,167, 182, 343, 363, 443, 444, 445, 446, 447, 448, 449, 450, 451, 452, 453, 454, 455, 456, 457, 458, 459, 460, 694, 828, 831, 840,852

அடுத்த இதழுடன் (ஏப்ரல்'04) முடியும் சந்தா எண்கள்

20, 76, 231, 420, 849, 850, 854, 867, 868, 870, 871, 877

குறிப்பு: 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிதாகச் சந்தா செலுத்துவோர், புதிய சந்தா என எழுதி தங்களது முழு முகவரியை அ.கு. எண் (Pin Code) உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 21
• குரல்: 10
• மார்ச் 2004

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-ஆவது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகே,
அசோக்நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:

காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

*அட்டை வடிவமைப்பு:*
*ஸ்பார்ட்டகஸ்*

# மகாமகம்: குஜராத்திற்கொரு முன்னோட்டம்!

**க**டந்த 1992 கும்பகோணம் மகாமகம் விழா 42 பேரை மிதித்துக் கொன்று பலியிடமாக மாறியது. இந்த 2004 மகாமகம் மிகப் பெரிய அளவிலான மதவெறிப் பாசிச அரசியல் பிரச்சாரமாக மாற்றப்பட்டது. மகாமகக் குளமும், தீர்த்தவாரிகளும் வற்றிப் போனதால் லாரிகளைக் கொண்டு நீரை நிரப்பினார்கள். அதைப்போல பார்ப்பன புராணப் புரட்டுகள் பொருளிழந்த நிலையில் இந்துமதவெறி பாசிச அரசியலைக் கொண்டு நிரப்புகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ். - வி.இ.ப. போன்ற பார்ப்பன மதவெறிப் பயங்கரவாதிகள் தமது உண்மையான முகத்தை ஒளித்து வைத்துக் கொண்டு, பாமரர்களின் பக்தி - தெய்வ நம்பிக்கையைக் கேடாகப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ளும் தந்திரத்தை நீண்ட நாட்களாகக் கைக்கொண்டு வருகிறார்கள். மதுரை சித்திரைத் திருவிழா, பழநி தைப்பூசம் - பங்குனி உத்திரம், ஐயப்பன் சபரிமலைப் பயணம், மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி வழிபாடு போன்ற எல்லாவற்றையும் கைப்பற்றிக் கடத்திக் கொண்டு போய் விட எத்தணிக்கிறார்கள். இந்த வரிசையில் திருவண்ணாமலை கிரிவலம், சிவன் கோவில்களில் பல புதுப்புது விழாக்கள், இப்போது கும்பகோணம் மகாமகம் விழா என்று புதிது புதிதாகக் கிளப்பிவிட்டு மதவெறி அரசியல் நஞ்சூட்டுகிறார்கள். தெய்வ பக்திக்கு முதலில் மதச் சாயம் பூசி, அத்துமீறிய அடாவடிச் செயல்களில் ஈடுபட்டு எதிர்ப்போரை இந்து விரோதிகள் - தேச விரோதிகள் என்று முத்திரை குத்தி ஒடுக்குவதும், அதற்கு அரசு இயந்திரத்தை போலீசைப் பயன்படுத்துவதும் வழிமுறையாக உள்ளது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மகாமகம் குளத்தில் நீராடுவதால் பாவம் தீரும் என்பதுதான் இதுவரை மகாமகம் பற்றிக் கூறப்பட்டு வந்த ''புராணம்''. ஆனால், வடக்கே நடக்கும் கும்பமேளாவைப் போன்று 12 நாட்கள் மகாமகம் விழாவை நடத்துவது மதவெறி அரசியல் பிரச்சாரத்துக்கு வசதி என்பதால் பழைய புராணத்தைத் தாமே கைவிட்டு விழாவுக்கான கொடியேற்றிய நாளில் நீராடுவது கூடப் பாவம் தீர்க்கும் என்று புது வியாக்கியானம் செய்தார்கள். கும்பகோணம் நகரைச் சுற்றி 30 கி.மீ. தூரத்துக்கு வரிசையாக காவிக் கொடிகள் கட்டி, கிராமம் கிராமமாகவும் வீடு வீடாகவும் போய் மதமாற்றத் தடைச் சட்டத்தையும், அயோத்தி ராமன் கோவில் கட்டுவதையும் ஆதரித்துத் துண்டறிக்கைகள் கொடுத்தனர். இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் முதலிய இலவசங்கள் வழங்குவதாகக் கூறி மகாமகத்துக்கு ஆள் திரட்டினார்கள். மாட்டு வண்டி முதல் மாருதி கார்கள் வரை பிரச்சாரத் தட்டிகளையும் ஒலி பெருக்கிகளையும் கட்டிக் கொண்டு சாலைகள், தெருக்கள், சந்து பொந்துகளில் கூவித் திரிந்தனர். மகாமகத்தை ஒட்டி ஆர்.எஸ்.எஸ். - வி.இ.ப. தலைவர்களும் மடாதிபதிகள் - பீடாதிபதிகள், சன்னியாசிகள் - சாமியார்கள், ஓய்வு பெற்ற பார்ப்பன அதிகாரிகள் இரண்டு நாள் மாநாடு நடத்தினர். இந்த மதவெறி அரசியல் பிரச்சாரத்துக்கு தானியங்கி துப்பாக்கி ஏந்திய அதிரடிப் படையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தரப்படுகின்றன.

''தேசம், தர்மம், பண்பாடு, திருக்கோயில்கள், திருமடங்கள் நலன் காக்க தமது கோரிக்கைகளைத் தேர்தல் அறிக்கையில் சேர்த்து, அவற்றைச் செயல்படுத்த உறுதி அளிக்கும் அரசியல் கட்சிகளுக்கே இந்துக்கள் வாக்களிக்க வேண்டும். மதமாற்றத் தடைச் சட்டத்தை அமல்படுத்திய கட்சிக்கே இந்துக்கள் ஓட்டுப் போட வேண்டும். இந்துக்கள் இந்து வேட்பாளருக்கே ஓட்டுப் போட வேண்டும்'' என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவையே துண்டறிக்கைகளாக அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அரசு இயந்திரமும் 50 கோடி ரூபாய் வரை அரசு நிதியும் செலவிடப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு, போக்குவரத்து, கழிப்பிடங்கள், அவசர மருத்துவ வசதிகள் என்று பலவகையிலும் நிதி கொட்டப்பட்டிருக்கிறது. சாலைகள், ரயில் பாதைகள் தனிச் சிறப்பாகவும் அவசர கதியிலும் புதுப்பிக்கப்பட்டன. புண்ணிய தீர்த்தம் என்ற புரட்டு வற்றிப் போன நிலையில், மக்கள் குடிநீருக்கே குடத்தைத் தூக்கிக் கொண்டு அலையும் நிலையில் நூற்றுக்கணக்கான லாரிகளில் மூன்று நாளுக்கு ஒருமுறை தண்ணீர் கொண்டு வந்து கொட்டப்பட்டது. முட்டி அளவு சேற்று நீரில் நின்று கொண்டு அதையே வாரி இரைத்து பாவம் தீர்ந்தது என்று பாமர மக்கள் பகுத்தறிவின்றி ஆட்டம் போட்டதைப் பார்ப்பன - பயங்கரவாதிகள் கண்டு களித்தனர்.

இதை அறிந்தும், எல்லாக் கூத்துக்களும் மதத்தின் பெயரால் நடத்தப்பட்டதன் காரணமாக ''இந்து உணர்வை''ப் பாதிக்கும் என்கிற பயபீதிகாரணமாக மதவாத எதிர்ப்பாளர்கள் என்று கூறிக் கொள்ளும் எதிர்க்கட்சிகளின் கூட்டணி வாய் மூடிக் கிடந்தது. நடுநிலை நாடகமாடும் செய்தி ஊடகம் சிறப்புச் செய்திகள் வெளியிட்டு மதவெறி அரசியலுக்குச் சலாமடித்தன. மீண்டும் பகுத்தறிவு, சுயமரியாதை, நாத்திக இயக்கம் பெருமளவில் நடத்தப்பட்டு, பார்ப்பனப் பயங்கரவாதிகளின் சதிகள் முறியடிக்கப்பட வேண்டும். இல்லையானால் அவர்களின் கும்பகோணம் மாநாட்டில் தலைவர்கள் கூச்சலிட்டதைப் போல தமிழகம் இன்னுமொரு குஜராத்தாக மாறிவிடும்.

படிப்பகம்

www.padippakam.com

# தோற்றுத் துவண்டது தமிழகம் தூக்கி நிறுத்தினான் மன்மதராசா!

தோழர்களே,

தோற்றுத் துவண்டது தமிழகம் - தூக்கி நிறுத்தினான் மன்மதராசா. தோற்றுத் துவண்டது - எப்படித் தோற்றது? எப்படித் துவண்டது? இவற்றைப் பற்றித் தமிழக மக்கள் அறியவில்லை என்றாலும் மன்மத ராசாவை எல்லாருக்கும் தெரியும்.

ஜெயா ஆட்சியின் கீழ் 2 லட்சம் அரசு ஊழியர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்களே அதிலிருந்து தொடங்கி எளிய நெசவாளர்கள் வரை, விவசாயிகள் தொடங்கி மாணவர்கள் வரையில் எல்லாப் பிரிவு மக்களும் போராடியதும் அவர்கள் நசுக்கப்பட்டதும் நாம் அனைவரும் அறிந்த உண்மை. மூன்றாண்டுகளாக நடைபெற்ற போராட்டங்கள் கொஞ்ச தூரம் முன்னே போய் தாக்குதலைச் சந்தித்த உடனே பின் வாங்கி அடங்கி ஒடுங்கி விட்டன. அதற்கும் மன்மதராசாவிற்கும் என்ன உறவு, என்ன சம்பந்தம்?

போராட்டங்களின் தன்மையைப் பற்றி நீங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்தப் பிரிவு மக்களும் புதிதாக ஒரு கோரிக்கையை வைத்துப் போராடவில்லை. ஏற்கெனவே தாங்கள் பெற்றுவந்த சலுகைகள், பெற்றிருந்த உரிமைகள் பறிக்கப்படுவதற்கெதிராகப் போராடினார்கள்.

விவசாயிகளின் உரிமைகளும், அரசு ஊழியர்களின் ஊதிய உரிமைகளும், தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமையும், மாணவர்களின் கல்வி உரிமையும், ஏறத்தாழ வழிப்பறி செய்வதுபோல இந்த அரசால் பறிக்கப்பட்டன. இதே காலகட்டத்தில்தான் 'பாய்ஸ்' என்று ஒரு படம் வந்திருக்கிறது - இந்த ஓராண்டில்; 'திருடா திருடி' என்ற படம் வந்திருக்கிறது; இன்னும் - கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா, ஓடிப்போயி கட்டிக்கலாமா போன்ற படங்கள். இவற்றையெல்லாம் தமிழகம் ரசித்திருக்கிறது.



அரசு ஊழியர் சங்கங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்த ஜெயா அரசைக் கண்டித்து ஒரு கையாலாகாத போராட்டம்!

இதை ரசித்தவர்கள் யார்? இந்தப் போராடும் வர்க்கப் பிரிவுகளைச் சாராத மக்களா? இதை ரசித்தவர்களில் மாணவர்கள் இல்லையா, விவசாயிகளின் பிள்ளைகள் இல்லையா? அடி வாங்கிய அரசு ஊழியர்களின் பிள்ளைகள் இல்லையா? அதில் அரசு ஊழியர்களே இல்லையா?

இருந்தார்கள். ரசித்தார்கள். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இதுதான் இப்போது கேள்வி. இது பலருக்குப் புரிவதில்லை. இதுவேறு - இது அரசு அடக்குமுறை; அது சினிமா. மொட்டைத் தலையையும் முழங்காலையும் முடிச்சுப் போடத் தேவையில்லையே, ஏன் செய்கிறீர்கள் என்று அவர்கள் கேட்கக் கூடும்.

தனிநபருக்கு நடந்தால் இதன் பெயர் வழிப்பறி; அது நம் சமூகத்துக்கு நடந்திருக்கிறது. ரேசன் அரிசிக்குக் கொடுத்த காசை பிக்பாக்கெட் கொடுத்துவிட்டு ஒருவன் டான்ஸ் ஆடினால், அவனைப் பைத்தியக்காரன் என்று தயக்கமில்லாமல் சொல்லுவோம். ஆனால் இதே காரியத்தை இந்தச் சமூகம் செய்திருக்கிறது. இது நமக்குப் பிரச்சினையாகவும் தெரியவில்லை.

அதை எப்படிப் பாடலாம்? ''மன் மத ராசா, மன்மத ராசா, ஸ்டிரைக்கு இனிமேல் பண்ணாதே. விட்டிடுலேசா, விட்டிடுலேசா, என்னை டிஸ்மிஸ் பண்ணாதே!'' என்று போட்டுக் கொள்ளலாம். கேட்டால் சிரிக்கிறாற் போல அல்லவா இது கேவலமாக இருக்கிறது!....

அன்பார்ந்த தோழர்களே, ஒரு அடக்குமுறை வரும்போது, எதிரி நம்மை அடக்கும்போது, இரண்டு எதிர் வினைகளை நாம் அவதானிக்கலாம். ஒன்று: தோற்றுப் போனவனின் அழுகை; இன்னொன்று: எதிர்த்துப் போராடுபவனின் கோபம். இது இரண்டுமே தமிழகத்தில் நடக்கவில்லை. தமிழகம் முழுவதும் இந்த அடக்குமுறையைக் கண்டு அஞ்சி ஒப்பாரி வைத்திருந்தால், ஒருவேளை அதற்காக மகிழ்ச்சி அடையலாம். ஆனால் தமிழ்நாடு டான்ஸ் ஆடிக் கொண்டிருக்கிறது. இது எவ்வளவு கேவலமான நிலைமை? இதுதான் நாம் எழுப்ப வேண்டிய கேள்வி. எழுப்பியிருக்கின்ற கேள்வி.

ஆனால், என்ன சொல்கிறார்கள்? அது சினிமா சார், இது வாழ்க்கை சார். அது நிழல், இது நிஜம். அது கற்பனை, இது உண்மை. சினிமாக்காரனைக் கேட்டால், ''10 மணிநேரம், 12 மணிநேரம் கஷ்டப்படுறாங்க. சாயங்காலம் ஒரு 10 ரூபா குடுத்துட்டு வந்து ஜாலியா சந்தோசமா இருக்கணும் அவன். அதுக்காகத்தான் நாங்க அரை அம்மண நடனங்களும், செட்டிங்குகளும் போட்டு அவுங்களைக் குஷிப்படுத்துறோம்'' என்று சொல்கிறான்.

வாழ்க்கை என்றால், நமக்கு, விவசாயிகளின் வாழ்க்கை, தொழிலாளர்களின் வாழ்க்கை, காவிரி வறண்டு போனதால் பஞ்சத்தில் தள்ளப்பட்ட தஞ்சை விவசாயிகளின் வாழ்க்கை; அவனுக்கோ ஸைட்டு, ஃபிகரு, கலரு, விஸ்கி, பீரு - இதுதான் இலக்கியமாக வரும். நம்முடைய மரபு என்பது, நம்முடைய பண்பாடு என்பது இன்றைய இலக்கியத்தில் இல்லை.

காவிரி காய்ந்திருக்கிறது, அது ஒரு தொடர்கதையாக இருக்கிறது. அதைப்பற்றி ஒரு பாடல் - யாராவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நம்முடைய பழைய இலக்கியத்தில் இருக்கிறது - சிலப்பதிகாரத்திலிருந்து. நம்முடைய நாட்டுப்பாடல்கள் வரையிலே. விவசாயிகளுடைய பாடல் இருக்கிறது, பழம்பெரும் இலக்கியவாதிகளின் பாடல்கள்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கின்றது. இன்றைக்கு ஒரே ஒரு பாடலாவது உண்டா?

தஞ்சை மாவட்டத்தில் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டபோது - நாங்கள் எழுதினோம். ''கரை மீறிடும் காவிரித்தாயே நீ எங்கே சென்றாயோ, உன் கழிமுகம் வாடக் கண்டும், கண்மூடிக் கொண்டாயோ'' காவிரி பதில் சொல்லப் போவதில்லை இதற்கு - ஆனால், இந்தக் காவிரியாற்றைப் பற்றி ஓர் ஆழ்ந்த உணர்ச்சி கொண்ட மனிதன் இதற்காகப் போராடாமல் இருக்க மாட்டான்.

காவிரிக்காக - எவ்வளவோ துன்பப்பட்டு, எலிக்கறி தின்னும் நிலைக்குத் தஞ்சை தள்ளப்பட்ட பிறகும், ஒரு வீரியமிக்க போராட்டம் நடந்ததா என்றால், இல்லை. இது வருத்தத்துக்குரிய ஒரு உண்மை. பலபேர் அறிக்கை விடுகிறார்கள் - ஆனால், ஒரு போர்க்குணமிக்க போராட்டம் நடந்ததா என்றால், இல்லை.

இப்படி, இது உலகமாக - வாழ்க்கையாக சினிமாக்காரர்களுக்குத் தெரிவதில்லை. விவசாயிகள், தொழிலாளிகள், ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை மக்கள், தலித் மக்கள் என்று இப்படிச் சமூகத்தினுடைய சோகத்தைப் பேசினால், அது சோகமாக அவர்களுக்குப் படுவதில்லை. அவர்களைப் பொறுத்தவரை, தனிநபரின் சோகத்தைப் பேசவேண்டும்.

நம்முடைய பாடல் ஒன்று இருக்கிறது. ''சம்மதமா, சம்மதமா நீ இந்து என்றால் சொல், சம்மதமா?'' அயோத்திப் பிரச்சினையை ஒட்டி பகல்பூரிலே கொலை செய்து காலிஃபிளவர் வயல்களிலும், கோதுமை வயல்களிலும் புதைக்கப்பட்ட முசுலீம்களைப் பற்றி இந்தப் பாடல் பேசுகிறது. இது ஒரு சோகமாகப்படுவதில்லை இவர்களுக்கு.



காளி பயிரிட்டு, விலைவீழ்ச்சி அடைந்ததால் ரூம் நிறைய தக்காளியை அடுக்கி வைத்து அதன்மேலே பூச்சி மருந்தைக் குடித்துவிட்டுப் படுத்து, தக்காளியோடு தக்காளியாக அழுகிச் சாகிறார் ஒரு விவசாயி - இதெல்லாம் சோகத்தை ஏற்படுத்துவதில்லை மேலே சொன்னவர்களுக்கு.

ஏழை எளிய மக்கள் கடந்த ஒரு மாதகாலமாகப் பல்வேறு நகரங்களில் குடிசைகளிலிருந்து வெளியே தூக்கி எறியப்படுகிறார்கள். எங்கே போவதென்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். இது சோகத்தை ஏற்படுத்துவதில்லை.

வேறு எது இவர்களுக்குச் சோகத்தை ஏற்படுத்தும்? வீடு வரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசி வரை யாரோ? - இது தான் அவர்கள் சோகம் என்று சொல்வது. அது, தனிப்பட்ட சோகம். அது தான் சோகம்; மற்றவை சோகம் அல்ல. ஊரார் சோகமெல்லாம் நமக்குத் தேவையில்லாதவை என்று படித்தவர்கள், நடுத்தர வர்க்கத்தினர் நடிக்கிறார்கள்.

இந்த நடிப்பைப் பற்றி அமெரிக்கக் கறுப்பினப் பாடகி டிரேசி சாப்மன் அழகாகப் பாடுகிறார். ''நகரத்துக்குள்ளே ரகசிய உலகமாக ஒரு சேரி இருக்கிறது என்று அமெரிக்கர்கள் ஒத்துக் கொள்வதில்லை; ஆனால், மக்கள் வாழ்கிறார்கள்.'' அமெரிக்கச் சேரிகள் சென்னை நகரச் சேரிகளை விட மிகக் கேவலமாக வைக்கப்பட்டுள்ளன.

அந்த ரகசிய உலகு பற்றி இருட்டடிப்பு செய்யப்படுகிறது, எந்தச் சினிமாவிலும் நீங்கள் அதைப் பார்க்க முடியாது. இது உங்களுக்குத் தெரியுமா? அத்தனைக் கொடுமையான வாழ்க்கை - இதைப் பற்றி வெள்ளை இன நடுத்தர வர்க்கம் கண்டு கொள்வதில்லை. அதே போலத்தான் நம் நாட்டு நடுத்தர வர்க்கமும் உழைக்கும் மக்களின் சோகம் கண்டு கண்ணை மூடிக் கொள்கின்றது.

அது கூட வேறு விதம். ஆனால் தன் சொந்தத் தோழன், கூட வேலை பார்த்தவன், அவனுடைய துயரத்தை - சோகத்தை - இழப்பையே அவர்கள் கண்டு கொள்ளவில்லை. அரசு ஊழியர்கள் 12 லட்சம் பேர் போராடினார்கள்; அத்தனைக் குடும்பங்களும், குடும்பத்துக்குத் தலா எட்டுப் பேர் வைத்தாலும் சுமார் 1 கோடி மக்கள் வீதியில் இறங்கியிருந்தால் இந்த அரசே வீழ்த்தப்பட்டிருக்கும். ஆனால், என்ன செய்தார்கள்? ''நாங்க வெளியே வர்லே. போலீஸ் பயம்'' - என்றார்கள். அது உண்மை அல்ல; பச்சைப் பொய்.

போலீசு - வெளியே இல்லை; வெளியே அடக்குமுறை இருந்தது என்பது இரண்டாம் பட்சம்; வேலை நிறுத்தம் என்று சொல்லிவிட்டு ஒரு சில ஆயிரம்பேர் அடிபட்டுக் கைது செய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டபோது, வீட்டில் உட்கார்ந்து சீரியல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உண்டா, இல்லையா?

இதே தஞ்சாவூரிலே, ஒரு நெசவாளி, கடன் கட்ட முடியாமல் தன் குழந்தையை, மனைவியை அடித்துக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது சுற்றியிருந்தவர்கள் அவரைப் பிடித்து விடுகிறார்கள். அவர் இப்போது திருச்சி சிறையில் பைத்தியமாக இருக்கிறார்.

ஒசூரிலே ஒரு விவசாயக் குடும்பம் - நம் கலைக்குழுத் தோழர்கள் அங்கே சென்று வந்து சொன்ன செய்தி - தக்

**கோலார் தங்கச் சுரங்கம் ஆஸ்திரேலியாவுக்கு விற்கப்பட்டு விட்டது. ''நாங்கள் நடத்துகிறோம்'' என்று தொழிலாளர்கள் கேட்டதற்கு அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது. அவர்கள் பஞ்சத்திலே சிறுகச் சிறுகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் லொகேஷன். அந்த இடம்; அந்த செட்டிங்; அந்த அட்மாஸ்பியர் என்று சொல்கிறார்களே, சூழல், இது தான். இந்தச் சூழலில்தான் மன்மதராசா.**

தன்னுடைய சொந்தத் தோழர்களுடைய சோகத்தை விட, தங்களுடைய சொந்தத் தோழர்கள் ஏறத்தாழ 40 பேர் மாரடைப்பு வந்து செத்தால் கூட, தற்கொலை செய்து கொண்டு செத்தால் கூட, அதைவிட டி.வி. சீரியல் நாயகிகளின் சோகம் இவர்களுக்கு முக்கியமாக இருந்தது. போலீசு வெளியே இல்லை, போலீசு வீட்டுக்குள்ளே இருக் கிறான் - அதுதான் டி.வி; நீங்கள்

www.padippakam.com

வெளியே போகக் கூடாது என்று உங்களுக்கு லாக்-அப் ஆக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ''ஏன் அவர்கள் தெருவில் இறங்கி வரவில்லை'' - என்பதற்கு இது விடை. ''அது சினிமாசார், இது வாழ்க்கை சார்'' என்று பேசமுடியாது.



சித்தி போன்ற தொடர்கள் மூலம் வீட்டிற்குள்ளேயே கைது செய்யும் தொலைக்காட்சி போலீசு!

சினிமாவில் எதை ரசிக்கிறீர்களோ, தொலைக்காட்சியில் எதற்குக் கண்ணீர் வடிக்கிறீர்களோ, சினிமாவில் எதற்குச் சிரிக்கிறீர்களோ, அந்த அழகியல் உணர்ச்சி, அந்த ரசனை உங்களுடைய உண்மையான வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும். இதுதான் நிழலுக்கும் நிஜத்துக்கும் இடையிலான உறவு. அரசு ஊழியர் போராட்டத்தில் நடந்த ஒரு சான்றைச் சொன்னேன். இது ரொம்ப விகாரமாக இருக்கிறது. எண்ணிப் பார்க்க முடியாத விகாரம்.

ஒரு 2000 பேர் வேலைக்குப் பரிதவிக்க, சுமார் 12,00,000 பேர் எனக்கென்ன என்று போய் உட்கார்ந்திருந்தார்கள். எதற்காக இந்த அம்மாளிடம் மன்றாடணும்? 12,00,000 பேர் மாதம் ஆளுக்கு ரூ. 10 கொடுத்தால், ஆயுள் முழுவதும் போராடலாம். முடியாதா? இவர்களைப் பராமரிக்க முடியாதா? இந்தக் குடும்பங்களைப் பராமரிக்க முடியாதா? ஏன் காலில் விழுந்து கெஞ்ச வேண்டும்? ஏனென்றால் தங்கள் சக ஊழியர்கள், சக தோழர் களின் சோகத்தின் மீது அவர்களுக்கு இருக்கின்ற அக்கறை அவ்வளவு. இதற்கு ஒரு உருவகம் தான் மன்மத ராசா.

இந்த மன்மத ராசா பாட்டை நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். அப்படியே கன்னங்கரேல் என்று மண்மேடு. அதில் ஒரு கருப்புத்துணி பறக்க, நாயகனும் நாயகியும் வெறி கொண்டதுபோல் ஆடுகிறார்கள். கருப்பு நிறம், அனல், காமம், வெறி, இதுதான் அந்தக் காட்சி. அது எங்கே எடுத்தது தெரியுமா? கோலார் தங்க வயலில்.

கோலார் தங்க வயல் சுரங்கத்தை உருவாக்கிய தொழிலாளிகள் ஏறத்தாழ 3,000-க்கும் மேற்பட்ட தமிழ்த் தொழிலாளிகள், அதிலும் தாழ்த்தப்பட்ட தொழிலாளிகள், சுரங்க வேலையிலிருந்து தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள்.

கோலார் தங்கச் சுரங்கம் ஆஸ்திரேலியாவுக்கு விற்கப்பட்டுவிட்டது. ''நாங்கள் நடத்துகிறோம்'' என்று தொழிலாளர்கள் கேட்டதற்கு அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது. அவர்கள் பஞ்சத்திலே சிறுகச் சிறுகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் லொகேஷன். அந்த இடம்; அந்த செட்டிங்; அந்த அட்மாஸ்பியர் என்று சொல்கிறார்களே, சூழல், இதுதான். இந்தச் சூழலில்தான் மன்மதராசா.

சுரங்கத் தொழிலாளிகளின் சோகம் சொல்லி மாளாது. பீகார் சுரங்கங்களில் தினம் புதையுண்டு சாகின்ற தொழிலாளிகள் ஏராளம். அவர்களின் இந்தப் பின்னணியை வைத்து எங்கள் பாடல் ஒன்று இருக்கிறது: ''சுரண்டும் அரக்கர் பணம் சேர்க்க சுரங்கம் சென்ற தோழர்களே, மனைவி மக்கள் பசி தீர்க்க உயிரைப் பலியாய்க் கொடுத்தீரோ?'' அப்பாடல் முடியுமிடத்தில் ''ராசா ராசா... என் மன்மத ராசா'' பாடலை இணைத்துப் பாருங்கள்! இந்த விகாரத்துக்கு இதற்கு மேல் என்ன வேண்டும்?

இழவு வீட்டில் களிவெறியாட்டம் என்பது இதுதான். எத்தனைப் பெரிய சோகம் நடந்த இடத்தில் அதை வைத்துக் கொண்டு இப்படி ஒரு காமவெறியாட்டம். இதே காட்சியை ஈராக்கிலோ, காசுமீரிலோ (அவுட்டோர் சூட்டிங்கில்) தமிழ்ச் சினிமாப் பொறுக்கிகள் செய்வார்களா? முடியாது. ஏனென்றால், அங்கே இருக்கிற அரசியல் வேறு, அது போர்; நம்நாட்டில் இருக்கின்ற அரசியல், சவடால். அங்கே வெளிப்படுவது போர்க்குணம்; இங்கே, சும்மா ஒரு பொறுக்கித்தனம், அரசியல் இல்லை. இந்த மன்மத ராசா சினிமாவோடு முடியவில்லை; அதன் தாளகதி - ''இந்தப் படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா... பனமரத்துல வவ்வாலு, ஜெயாவுக்கே சவாலு.'' இதில் அரசியல் இல்லை; வெறும் பொறுக்கித்தனம்.

எந்த ரசிகர் மன்றக் கும்பல் அரசியலுக்கு வருகிறதோ, எந்தக் கிரிமினல் சாராயக் கும்பல் அரசியலுக்கு வருகிறதோ, அந்தக் கும்பல்தான் சினிமாவில் இருக்கிறது. இதன் சவடால் அறிக்கைகள், வெற்றுப் பேச்சுக்கள் எல்லாம் ஒரே தாளகதியில் அப்படியே ஒன்றாகச் சேர்கின்றன. சினிமாவில் தனுஷ் சவடால்; அப்புறம், அப்பாவுக்கு பணிந்து போகும் பிள்ளை அவர். அதேபோல, நம் கட்சிகள் சவடால்; அப்புறம் வல்லரசுகளுக்கும், ஏகாதிபத்தியங்களுக்கும் பணிந்து போகும் பிள்ளைகள் இவர்கள். இந்த ஒத்த தன்மைகள், தற்செயல் அல்ல; நமது பண்பாட்டின் அங்கமாக இவை மாறி விட்டன.



காசுமீர் தற்கொலைப் போராளியின் பிணத்தைக் கூட தொடுவதற்கு அஞ்சும் போலீசு - இங்கே மன்மதராசா படம் எடுக்க முடியுமா?

கவிதைக்கு முக்கியமானது படிமம். இசைக்கு முக்கியமானது தாளம். ஒரு காட்சிப் படிமமும் இசையும் கவிதையும் சேரும்போது அது ஒரு வெடிமருந்தைப் போல வேலை செய்கிறது. இந்த 'மன்மத ராசா'ப் பாட்டு தமிழகத்தில் ரொம்பப் பிரபலம். பல மழலையர் பள்ளிகளில் எல்லாம் கூட, பெற்றோர், தங்கள் பிள்ளைகள் இந்தப் பாட்டுக்கு மேடையில் ஆடுவதை மிகவும் சந்தோசமாகப் பார்த்து ரசிக்கிறார்கள்.

அந்தத் தாளகதிக்குப் பிள்ளைகள் ஆடுகிறார்கள் என்பதால் அவர்களை நாம் குறை

www.padippakam.com

சொல்ல முடியாது. அது உயிரியல் - தாளக திக்கு ஆடும்; என்னவென்று அதற்குத் தெரி யாது. பிள்ளைகள் கெட்டுப் போய் விடு வார்கள் என்கிறார்கள்; அப்படியல்ல; பெற் றோர்கள் தான் கெட்டுப் போய் விட்டார் கள். அதுதான் பிரச்சினை. பையன் ஆடுவ தைப் பெருமையாகச் சொல்லிக் கொள்கிற பெற்றோர், யாராவது விருந்தாளிகள் வந் தால், "எங்கே மாமாவுக்கு ஆடிக் காட் டய்யா" என்று சொல்வார்கள். இது நடக்கி றதா இல்லையா? இதை என்னவென்று புரிந்து கொண்டிருக்கிறார்கள் நம்முடைய பெற்றோர்கள்? நம்முடைய இளைஞர்கள்?

இதெல்லாம் 'மன்மத ராசா' என்ற ஆபா சப் பாடலோடு முடிகிற விசயம் அல்ல. அமெரிக்கப் பாணியிலான தரமான, நுகர் பொருள் மோகம் கொண்ட சொகுசு வாழ்க் கையை இப்படிப்பட்ட படங்களும் பாடல் களும் முன் வைக்கின்றன. இதைப் பற்றிய நமது பாடல் ஒன்று இருக்கிறது. "தரமா, இல்ல வக்கிரமா? பசி பசி என்று மக்கள் தவிக்கையில் வகைவகையாய் வாழ்வை ருசிப்பது... தரமா, இல்ல வக்கிரமா?"

எனவே இந்த மன்மதராசாவெல்லாம் தானாக ஜனரஞ்சகமாகி விடவில்லை. 'இது மக்கள் விரோதமாக இருக்கிறது" என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் தான் ஜனரஞ்சகமாக மக்கள் மத்தியிலே கொண்டு செல்லப்படுகிறது. ஆனால், 'ஜன ரஞ்சகம்' என்ற பெயரில் இவற்றை ஏற்றுக் கொள்ளவோ, அல்லது இவற்றுடன் சமர சம் செய்து கொள்ளவோ முடியாது.

மக்களுக்குப் பிடித்திருக்க வேண்டும் என்பதற்காக, மக்களுக்குப் பிடித்த கீழான காரியங்களை நாம் செய்ய முடியாது. மக் களை மாற்றியமைப்பதற்காக, புதியதொரு உலகத்தை உருவாக்குவதற்காக நாம் போராடுகிறோம். அப்போது, புதிய மனி தனை உருவாக்குவது, புதிய மக்களை உரு வாக்குவது என்பதோடு இணைந்து புதிய மக்கள் ரசனையை உருவாக்கவும் முடியும்.

புதிய இசையை, புதிய பண்பாட்டைப் படைப்பதற்கான நமது போராட்டம் என் பது பிரச்சாரத்தின் ஊடாக, மக்களுக்கு எடுத்துச் செல்வதன் ஊடாக, வேண்டு கோள் விடுவதன் ஊடாக, அறைகூவல் விடுவதன் ஊடாக, திரும்பத் திரும்ப, மீண் டும் மீண்டும் மக்களுக்கு இசையிலும் பண் பாட்டிலும் கல்வி அளிப்பதன் மூலம்தான் நடைபெறுகிறது.

இதற்கெல்லாம் அடிநாதம், ஒரு கனவு; சுயநலக் கனவல்ல, முன்னேறிய - மக்கள் விடுதலை பெற்ற ஒரு உலகத்தை உருவாக் குகின்ற ஒரு புரட்சி பற்றிய கனவு!

**● 21.02.04 தஞ்சை தமிழ் மக்கள் இசைவிழாவில் தோழர் மருதையன் ஆற்றிய உரையின் சுருக்கம்.**





**புதிய வெளியீடுகள்**

புதிய கலாச்சாரத்தில் வெளிவந்த திரைப்பட விமரிசனங்கள் (சினிமா: திரை விலகும்போது...) மற்றும் தோழர் மருதையன் எழுதிய உரைவீச்சுக்கள் (போராடும் தருணங்கள்) தொகுக்கப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன.




**நூலில் இடம் பெறும் திரைப்பட விமரிசனங்கள்:**

'மகாநதி':
●
'வீடு':
●
'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை':
●
'காதல் கோட்டை, காதல் தேசம்':
●
'காதலுக்கு மரியாதை':
●
'அஞ்சலி':
●
'அழகி':
●
'ரோஜா':
●
'வேதம் புதிது'
●
பம்பாய்
●
'ஜென்டில்மேன்':
●
'தமஸ்':
●
'பாரதி'
●
'இருவர்'
●
'ஹே ராம்'
●
'அன்பே சிவம்'
●
சிவாஜி கணேசன்
●
'ராம்போ':
●
'பொதெம்கின்' - 'டைட்டானிக்':
●
ஹாலிவுட்:
●
'தீக்கொழுந்து'
●

**நூலில் இடம் பெறும் உரைவீச்சுக்கள்:**

இவர்கள் ராஜீவுக்காக அழமாட்டார்கள்!
●
ஆயுதக் கலாச்சாரம்
●
நெருப்புக் கோழிகளும் பீனிக்ஸ் பறவைகளும்
●
தமிழன் என்று சொல்லடா! தலைகுனிந்து நில்லடா!
●
சரபோஜி... நேருஜி... இந்திராஜி.... ராஜீவ்ஜி... ராவ்ஜி.... சரபோஜி...
●
தில்லை முதல்... அண்ணாமலை நகர் வரை!
●
அத்வைதமும் அர்ஷத் மேத்தாவும்
●
பெருங்காயம் வாழ்ந்த பாண்டமே பெருமையில் உறங்கு
●
உலக அழகியாகிறாள் பாரதமாதா!
●
இறால் மீனும் ஞானப் பாலும்
●
பிராயச்சித்தம்
●
தேசபக்தி
●
விபத்து
●
21-ஆம் நூற்றாண்டிலா இப்படி?
●
பிணங்கள் பேசுகின்றன!
●

பக்கம்: 216 விலை: ரூ. 70

பக்கம்: 128 விலை: ரூ. 40

**கிடைக்குமிடங்கள்:**

இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம், 18, முல்லைநகர் வணிக வளாகம், இரண்டாவது நிழற் சாலை, அசோக் நகர், சென்னை - 600 083.
✆: 044-23718706, puthiyakalacharam@rediffmail.com

கீழைக்காற்று, 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை-2.




படிப்பகம்

www.padippakam.com

# மகாமகத்தில் முழுகுவது தமிழனுக்கு மானக்கேடு!

**- தந்தை பெரியார்**

மகாமகம் அல்லது மாமாங்கம் என்பதாக ஒரு பெரிய திருவிழா அடுத்த மாதம் (மார்ச் மாதம்) 10-ஆம் தேதியில் கும்பகோணத்தில் நடத்த ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன. சுமார் ஒரு இலட்சம் ஜனங்களுக்கு மேலாகவே வந்து கூடுவார்கள் என்று கணக்கிடப்பட்டு, இரயில்வேக்காரர்கள் பல பிளாட்பாரங்களையும், கொட்டகைகளையும் போடுகிறார்கள். அதற்குத் தக்கபடி கூட்டங்களை வரவழைக்க அநேகவித சித்திரப் படங்களை அச்சடித்து இரயில்வே ஸ்டேஷன்களில் மேடைகளில் எல்லாம் கட்டித் தொங்கவிட்டும், பத்திரிக்கைகளுக்குப் பணம் கொடுத்துப் பிரசுரிக்கும்படி செய்தும், மற்றும் பல வழிகளிலும் விளம்பரம் செய்கிறார்கள்.

சாதாரணமாகக் கும்பகோணமானது ஓர் அழகான பட்டணமென்றோ, வேறு ஏதாவது ஒரு வழியில் மக்கள் அறிவுக்கோ, தொழிலுக்கோ பயன்படுத்தத் தகுந்த விசேஷம் பொருந்திய பட்டணமென்றோ யாரும் சொல்லிவிட முடியாது. அது ஒரு புராதனமான பட்டணம் என்பதோடு, நாளுக்கு நாள் க்ஷீணதிசை அடைந்துவரும் தோற்றமுடைய பழங்கால முறைக் கட்டடங்களையும் உடைய ஊராகும். அதில் வசிக்கும் மக்களோ பெரும்பாலோர் பார்ப்பனர்களும், ''மேல்ஜாதி'' மிராசுதாரர்களுமாவர்.

## கும்பகோணம் - பார்ப்பனர்கள்

கும்பகோணம் பார்ப்பனர்கள் என்றால், மிகத் தந்திரசாலிகள் என்பார்கள். கும்பகோணம் மாத்திரமன்று, தஞ்சாவூர் ஜில்லா முழுவதுமே உள்ள பார்ப்பனர்கள் பழைய இராஜாவின் தர்மசத்திரத்தினாலும், மற்றும் தஞ்சை ஜில்லாவிலேயே ஏற்பட்டிருந்த இரண்டு முதல்தர காலேஜினாலும் சாப்பாடும் கல்வியும் சுலபமாய், இருக்கும் இடத்திலேயே கிடைக்கக் கூடிய நிலைமை இருந்ததால், படித்துப் பட்டம் பெறவும், அதற்கேற்ற உத்தியோகங்கள் பெறவும் சவுகரியம் ஏற்பட்டு இந்த மாகாணத்தில்



அவர்களே முக்கியமானவர்களாய் இருந்து வந்திருக்கிறார்கள்.

சுமார் 25 வருஷங்களுக்கு முன் தமிழ்நாடு மாத்திரமன்று, சென்னை மாகாண முழுவதிலும் தஞ்சை ஜில்லா பார்ப்பனர்களே திவான்களாகவும், பிரபல வக்கீல்களாகவும், முன்சீப், ஜட்ஜு, டிப்டி கலெக்டர், போலீசு இன்ஸ்பெக்டர், சூப்பிரண்டுகளாகவும் மற்றும் பல பெரிய பதவி உடையவர்களாகவும் நேர்ந்து பிரபலமாகிவிட்டார்கள். இந்தக் காரணங்களால் கும்பகோணப் பார்ப்பனர்களுக்கு அதிகமான விளம்பரம் ஏற்பட வசதியாகி விட்டது.

அங்குள்ள மிராசுதாரர்களும் ஏறக்குறைய பார்ப்பனர்களைக் காப்பியடித்துத் தங்களையும் மேல்ஜாதிக்காரர்கள் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதோடு நின்றுவிட்டார்களே தவிர, கல்வியில் அவர்களுடன் போட்டி போடவோ, உத்தியோகம் பெறவோ முடியாதபடி பார்ப்பனர்கள் செய்துவந்த சூழ்ச்சியை வென்று முன்னேற முடியவில்லை.

ஆதலால் பணம் சேர்ப்பதிலும், பூமியைப் பெருக்குவதிலும் மாத்திரம் கவலை கொண்டு ஆள் ஒன்றுக்கு 1000 வேலி 2000 வேலி என்பதாக நிலத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். இரண்டு கூட்டமும் சிறிதாவது சரீரத்தினால் உழைக்காமல், ஏழைகள், உழைப்பாளிகள் ஆகியவர்களின் பாட்டினாலேயே வாழ்ந்து வருகிறார்கள். இதைத் தவிர மற்றபடி அந்த ஜில்லாவுக்கும் கும்பகோணத்துக்கும் வேறு உண்மையான யோக்கியதை ஒன்றும் கிடையாது.

## தஞ்சை மாவட்டத்தின் தலபுராணம்

ஆனால் மற்றொரு யோக்கியதையும் உண்டு, அது மேற்சொன்னவற்றை விட மிகவும் மோசமான யோக்கியதையேயாகும். அதென்னவென்றால் தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒவ்வாரு விசேஷ ஸ்தலமாகும். பாடல் பெற்ற ஸ்தலங்களாகவும் பூலோக வைகுண்டமாகவும், பூலோக சுவர்க்கமாகவும் மற்றும் இந்தியாவில் உள்ள முக்கிய புண்ணியச் சேத்திரங்கள், புண்ணியத் தீர்த்தங்கள், புண்ணிய மூர்த்தங்கள் என்பவை எல்லாம் தஞ்சை ஜில்லாவிலேயே ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொன்று பிரதிபலிப்பதாகக் கதைகளும், புராணங்களும், கர்ண பரம்பரை விசேஷங்களும் உண்டு.

தஞ்சாவூர் ஜில்லாக்காரர்கள் படித்துவிட்டு வெளியிடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள செல்வங்களைக் கொள்ளைகொண்டு போய்ச் சேர்ப்பது ஒன்று; கிராமங்கள்தோறும், புண்ணியச் சேத்திரங்களும், பாடல்பெற்ற சேத்திரங்களுமாய் இருப்பதால், மற்ற ஊர்களில் இருக்கும் மூடர்கள் எல்லாம் பாடுபட்டுத் தேடிய பணங்களை மூட்டை கட்டிக் கொண்டு போய் அந்த ஜில்லாவில் அழுதுவிட்டு வரும் மடத்தனம் இரண்டு;

ஆகிய இவற்றால் மாத்திரமல்லாமல், மைசூர், குடகு தேசத்தில் இருந்து வரும் காவேரியானது சேலம் கோயமுத்தூர் ஜில்லா வழியாக வந்தாலும், சேலம் ஜில்லாக்காரர்களுக்குக் குடிப்பதற்குக் கூட மார்க்கமில்லாமல் செய்துவிட்டும், கோயமுத்தூர் ஜில்லாக்காரருக்கு ஒரு செண்டு பூமிகூடப் பயிராவதற்கு உதவாமற்படி ஏமாற்றிவிட்டு எல்லாத் தண்ணீரும் நேரே தஞ்சை ஜில்லா சென்று ஜனங்கள் வெளிக்குப் போவதற்குக் கூட இடமில்லாமல் எல்லா நிலமும் நன்செய்ப் பயிராகும்படியும் செய்துகொண்ட சூழ்ச்சியால் ஏற்பட்ட இலாபமும் மூன்று;

இந்தப்படியாக ''இயற்கை'' வளம் பெற்ற தஞ்சை ஜில்லாவுக்கு மகாமக விசேஷம் என்னும் ஒரு புரட்டு யோகமும் சேர்வதில் அதிசயமொன்றுமில்லை. ஆனால், இப்போது நாம் இதை ஏன் எடுத்துக்காட்ட வருகிறோம் என்றால், நம் மக்கள் இத்தனைக் காலம் தான் மூடர்களாய், மடையர்களாய், கடையர்களாய் இருந்து இவ்வித புரட்டுகளுக்கும், சூழ்ச்சிகளுக்கும் ஆளாகி நஷ்டமும், கஷ்டமும், இழிவும், ஏமாற்றமும் அடைந்து வந்தோம் என்றாலும்,



படிப்பகம்

www.padippakam.com

இனியும் பாரம்பரியமாய் தலைமுறை தலைமுறையாய் அடைய வேண்டுமா என்பதை ஞாபகப்படுத்தவே இதை எழுதுகிறோம்.

**மகாமக அற்புதம்!**

தோழர்களே!

மகாமகம் என்றால் என்ன என்பதைச் சற்று விசாரித்துப் பாருங்கள். இதை அறிவதற்காக நாம் ஆவல்பட்டுத் தேடினோம். கும்பகோண ஸ்தலபுராணம் என்பதில் இருப்பதாக அறிந்தோம், அதை வரவழைத்துப் பார்த்தோம். அதில் உள்ளதை வெளியிடுகின்றோம்:

''கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, சிந்து, கோதாவரி, சரயு, தாமிரபரணி ஆகிய ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னிகைகளாக வெளிவந்து வெள்ளியங்கிரிக்குச் சென்று பரமசிவனை அடைந்து, 'உலகத்தில் உள்ள மக்கள் எல்லோரும் எவ்வளவோ கொடியதாகிய பாவங்களைச் செய்துவிட்டு எங்களிடத்தில் வந்து ஸ்நானம் செய்து அவர்களது பாவங்களை எங்களுக்குக் கொடுத்துத் தீர்த்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அந்தப் பாவங்களையெல்லாம் பெற்றுக் கொண்ட நாங்கள் எப்படி அவற்றைப் போக்கிக் கொள்ளுவது' என்று கேட்டார்கள்.

அதற்குப் பரமசிவனார், 'கும்பகோணத்திலே, தென்கிழக்கிலே ஒரு தீர்த்தம் உண்டு. 12 வருஷத்துக்கு ஒரு முறை மாசிமாதம் மகாமகம் நாளன்று அதில் குளிப்பீர்களானால், உங்கள் பாவங்கள் தொலைந்து போகும்' என்று சொன்னார். அதற்கு 9 கன்னிகைகளும் 'கும்பகோணம் எங்கே இருக்கின்றது' என்று கேட்டார்கள். அதற்குப் பரமசிவனார் அந்த 9 கன்னிகைகளையும் பார்த்து, 'நீங்கள் காசிக்குப் போயிருங்கள், அங்கிருந்து நான் விஸ்வேஸ்வரன் என்னும் பெயருடன் உங்களைக் கும்பகோணத்திற்கு அழைத்துப் போகிறேன்' என்று சொன்னார்.

அந்தப்படியே கன்னிகைகள் காசிக்குப் போயிருந்தார்கள். பரமசிவனார் அவர்களைக் காசியிலிருந்து கும்பகோணத்துக்கு அழைத்துச் சென்று, மகாமகக் குளத்தைக் காட்டிக் குளிக்க வைத்தார். பிறகு சிவபெருமானும் அந்தக் கன்னிகைகளும் கும்பகோணத்திலேயே கோவில் கொண்டு விட்டனர். ஆதலால் இதில் அந்தக் காலத்தில் குளித்தவர்களுக்குச் சர்வ பாவமும் தொலைந்து சர்வ மங்களமும் உண்டாகும்'' என்று கண்டிருக்கின்றது.

**மடையர்கள் என்றால் கோபமேன்?**

தோழர்களே!

இதுதான் கும்பகோண ஸ்தல மகத்துவமும், தீர்த்த மகத்துவமும், கோயில் மகத்துவமும் ஆகும். இதற்கு அப்புறம் அந்தக் குளத்தில் எப்படிக் குளிப்பது, அதற்காகப் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனப் பெண்களுக்கும் எப்படி, எவ்வளவு பணம் கொடுக்க வேண்டியது என்கின்ற விஷயங்களும், எந்தெந்த இடத்தில் குளிப்பது, எந்தெந்தச் சாமியை எப்படி எப்படிக் கும்பிடுவது என்கின்ற விஷயமும் இருக்கின்றது.



**மகாமகத்திற்காக விரைந்து முடிக்கப்பட்ட அகல ரயில் பாதை. மூட நம்பிக்கைக்கு கோடிகளில் செலவு.**

இந்தக் கதையை ஆதாரமாக வைத்த இந்த மகாமக உற்சவத்திற்காக எவ்வளவு ஆர்ப்பாட்டங்கள், எவ்வளவு விளம்பரங்கள், எவ்வளவு பணச் செலவுகள், எவ்வளவு கஷ்டங்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். இந்துக்கள் மடையர்கள், அஞ்ஞானிகள், மூடர்கள் என்று ஒருவன் சொன்னால், உடனே கோபப்பட்டுக் கொள்ளத்தான் கற்றுக் கொடுக்கப்பட்டு இருக்கின்றோமே அல்லாமல் அறிவைக் கொண்டு பார்க்கின்றோமா?

இந்தக் கும்பகோணத்துக்கும், அங்குள்ள மாமாங்கக் குளத்திற்கும் உள்ள அநேக சாக்கடைகளிலும், பட்டிக்காடுகளிலும், குப்பை மேடுகளிலும் உள்ள குழவிக் கற்களுக்கும், நீரோடைகளுக்கும், குளங்களுக்கும் குட்டைகளுக்குமெல்லாம் புராணங்களும் கதை ஆதாரங்களும் அய்தீகங்களும் இருந்து வருகின்றன. பொதுவாக இது போன்ற எந்தக் காரியங்களுக்கும் விசேஷம் என்பதெல்லாம் இரண்டே இரண்டு வாக்கியங்களில்தான் அடங்கி இருக்கின்றன. அதாவது,

1. சர்வ பாபங்களும் நிவர்த்தியாகி விடும்.

2. வேண்டியதெல்லாம் அடையலாம், என்கின்றவையேயாகும்.

இந்த இரண்டு காரியங்களும் யோக்கியமான காரியங்களாயிருக்குமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

**மனிதன் செய்த பாவம் போகுமா?**

மனிதன் செய்கின்ற பாவமெல்லாம் இந்த மாதிரியான காரியங்களால் தீர்ந்து போவதாயிருந்தால், உலகத்தில் எந்த மனிதனாவது பாவகாரியங்களைச் செய்யத் தவறுவானா, தயங்குவானா என்று யோசித்துப் பாருங்கள்.

மனிதனுக்கு வேண்டிய, அவன் ஆசைப்படும்படியான காரியங்கள் எல்லாம் இந்த மாதிரியான சிறு காரியங்களால் கைகூடிவிடுவதாய் இருந்தால், மனிதனுடைய முயற்சி, நடத்தை, ஒழுக்கம் என்பவற்றுக்கெல்லாம் அவசியமும், நிபந்தனையும், வரையறையும் எதற்காக வேண்டும் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

நிற்க, பாவமுள்ள மனிதர்கள் நதிகளில் ஸ்நானம் செய்ததால் நதிகளுக்கு அந்தப் பாவங்கள் ஒட்டிக் கொண்டது என்பதில் ஏதாவது அறிவோ, உண்மையோ இருக்க முடியுமா? அந்த நதிகள் அந்தப் பாவத்தைத் தொலைக்க மற்றொரு தீர்த்தத்தில் போய்க் குளிப்பது என்று மகாமகத் தீர்த்தத்துக்கு வந்து குளிப்பதனால், இதில் ஏதாவது புத்தி இருக்கின்றதா? நாணயம் இருக்கின்றதா என்று யோசித்துப் பாருங்கள்.

இத்தனைப் பாவங்களையும் ஏற்றுக் கொண்ட மகாமகத் தெப்பக்குளம் அதன் பாவத்தைத் தீர்க்க எந்த உருவெடுத்து எந்தக் குளத்தில் போய்க் குளிப்பது என்பதையும், பிறகு அந்தக் குளம் வேறு எந்தக் குளத்துக்குப் போய்ப் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளும் என்பதையும் யோசித்தால், கடுகளவு அறிவுள்ளவனாவது இதை ஏற்க முடியுமா என்று பாருங்கள். இதையெல்லாம் கவனித்தால் மதத்தின் பேரால், பாவபுண்


படிப்பகம்

www.padippakam.com

ணியத்தின் பேரால், கடவுள் பேரால், தீர்த்தம், தலம், மூர்த்தி என்னும் பெயர்களால், மக்கள் எவ்வளவு தூரம் ஏய்க்கப்பட்டுக் கடையர்கள், மடையர்கள் ஆக்கப்படுகின்றார்கள் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

மற்றும், அந்தப் புராணத்திலேயே இந்த மகாமகக் குளத்துக்குள் வடக்குப் பாகத்தில் 7 தீர்த்தங்கள் இருப்பதாகவும், கிழக்குப் பாகத்தில் 4 தீர்த்தங்கள் இருப்பதாகவும், நடுமத்தியில் (66,00,00,000) அறுபத்தாறு கோடி தீர்த்தம் இருப்பதாகவும் இந்த மகாமகக் குளத்தில் முழுகினால் இத்தனைத் தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்த புண்ணியம் கிடைக்குமென்றும் எழுதி, அந்தப்படி ஒரு சித்திரமும் வரையப்பட்டிருக்கின்றது. இது எவ்வளவு பரிகசிக்கத்தக்க விஷயம் என்று பாருங்கள்.

இதை எழுதினவன் எவ்வளவு அயோக்கியன் 'அல்லது எவ்வளவு மூடன் என்பதன்று இப்போதைய நமது கேள்வி. மற்றென்னவென்றால், இதைப் படித்துப் பார்த்து இதன்படி நடப்பார்கள் என்று நம்பிய மக்களை இவன் எவ்வளவு முட்டாளாகவும், அடிவண்டலாகவும் கருதி இருக்கவேண்டும் என்பது தான் நமது கேள்வியாகும்.

### தேங்கிய நீர் தீர்த்தமா?

தீர்த்தம் என்றாலும், நதி என்றாலும், குளம் என்றாலும் என்ன என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். நதி என்றால் மழை பெய்வதால் ஏற்படும் வெள்ளங்கள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும் ஓடை அல்லது நீர்ப் போக்காகும்.

குளம் என்றால் இந்த மாதிரி ஓடையில் இருந்து வழிவைத்துத் தண்ணீர் நிரப்புவதோ, மழை வெள்ளத்தால் ஊரில் உள்ள அசுத்தங்களையும், கசுமாலங்களையும் அடித்துக் கொண்டு வந்து குளத்தில் விழுந்து தேங்கியிருப்பதோதான். மற்ற இட்டித் தீர்த்தங்கள் என்பதும் கிணற்றுக்குள் நீர் ஊற்றம் போன்ற ஊற்றேயாகும். இந்தத் தண்ணீர்களுக்கு எல்லாம் அந்தந்த இடத்தை அனுசரித்த குணங்களேதாம் உண்டு. மற்றபடி அவற்றில் ஒரு மனிதன் செய்யும் பாவம் என்பதைப் போக்கவோ,

**எனவே, இந்த மாமாங்கப்புரட்டுப் பார்ப்பனர்கள் பிழைக்க ஏற்படுத்திக் கொண்ட ஒரு சுங்கச்சாவடிக் கட்டுக்கதை அல்லாமல், இதில் ஏதாவது நாணயமோ, உண்மையோ, அறிவுடைமையோ இருக்க இடமிருக்கிறதா?**

அவன் ஆசைப்பட்டதைக் கொடுக்கவோ ஆன சக்திகள் எப்படி இருக்கக் கூடும் என்பது ஒரு மனிதனுக்குத் தெரியாதா என்றுதான் கேட்கின்றோம்.

### மாமாங்கக் குளம் என்றால் என்ன?

மாமாங்கக் குளம் என்பது மேல் கண்ட மாதிரியான ஒரு சாதாரண தெப்பக்குளம். மகாமகச் சமயத்தில் அதில் உள்ள தண்ணீர் அவ்வளவையும் இறைத்துவிட்டு வெறும் அடி வண்டலையும், சேற்றையும் மாத்திரம் மீதி வைத்து அதிலும் கந்தகப்பொடியைக் கலக்கி விடுவார்கள். அந்தச் சேறானது கறுப்புக் களிமண் போல் இருக்கும். அந்தக் குளத்தின் விஸ்தீரணமோ சுமார் 500 அடி சதுரம் இருக்கலாம். அடி மட்டம் சுமார் 200 அடி சதுரம் இருக்கலாம்.

இதில் இலட்சம் பேர்கள் குளிப்பது என்றால் எப்படிச் சாத்தியமாகும். அந்தக் குளத்தில் இறங்கி அந்தச் சேற்றில் கொஞ்சம் எடுத்துச் சரீரத்தில் பூசிக் கொள்ள வேண்டியதுதான். பிறகு இந்த அசிங்கம் போவதற்கு வேறு குளத்தில் குளிக்க வேண்டியதுதான். இதுதான் வழக்கமாம். ஒரு கிறிஸ்தவரோ, ஒரு மகமதியரோ இந்தப்படிச் செய்தால் அதை நாம் பார்க்க நேர்ந்தால் அப்போது நாம் என்ன என்று சொல்லுவோம்.

மிஸ். மேயோ நமது பழக்கவழக்கங்களைப் பற்றியும், சடங்குகளைப் பற்றியும், தீர்த்தங்களைப் பற்றியும் எழுதியதைப் பார்த்துக் கோபித்துக் கொண்டோம். ஆனால் இந்த மாதிரி சேற்றில் குளிப்பதால் நாம் செய்த பாவங்கள் எல்லாம் தீர்ந்து விடும் என்று கருதி இருக்கிற முட்டாள்தனமான பேராசைக்காக நாம் வெட்கப்படுவதில்லை என்றால், பிறகு எந்தவிதத்தில் நாம் அறிவாளிகள், யோக்கியர்கள், மனிதத் தன்மையுடையவர்கள் என்று யோசித்துப் பாருங்கள். இந்த மாமாங்கத்தால் எத்தனை இலட்ச ரூபாய் இரயில்காரன் கொள்ளை அடிக்கப் போகிறான்? எத்தனை இலட்ச ரூபாய் பார்ப்பான் கொள்ளை அடிக்கப் போகிறான் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

### அம்மை, காலராவுக்குப் பலியாவதோ?

இவை ஒரு பக்கம் இருப்பதோடு, கூட்ட நெருக்கடியில் உயிர்ச்சேதம் எவ்வளவு, திருட்டு எவ்வளவு, இவை தவிர இப்பொழுதே அங்குக் கும்பகோணத்தில் காலராவும், அம்மையும் வந்துவிட்டது. இதற்காகக் கொட்டகை கட்டி அங்குக் கட்டிலும் படுக்கையும் போட்டாகி விட்டது. பிளேக்குக்கும் கொட்டகை போட்டாகிவிட்டது. அதுவும்தான்தன் பாபத்தைத் தீர்த்துக் கொள்ள அங்கு வரப்போகின்றது. சுடுகாட்டுக்காக 10 ஏக்கர் நிலம் ஒதுக்கி வைத்துச் சில குழிகளும் தயாராய் முனிசிபாலிட்டியார் வெட்டி வைத்திருக்கிறார்கள்.

கும்பகோணத்துக் கொசுக்களோ அந்த ஊர்ப் பார்ப்பனர்களையும், குச்சிக்காரிகளையும் விட எத்தனையோ பங்கு மோசமானவை என்று சொல்லலாம். ஏனெனில், இவை அவர்களைவிட மோசமாக வெளியில் இருந்து வருகின்றவர்களின் இரத்தத்தை



ஆகஸ்ட், 2003-இல் மராட்டிய நாசிக் நகர கும்பமேளா நெரிசலில் மட்டும் 40 பேர் இறந்தனர். முட்டாள்தனத்திற்கு மக்கள் நரபலி!


படிப்பகம்

www.padippakam.com

உறிஞ்சக் காத்துக் கொண்டு இருக்கின்றன. மாமாங்கத்துக்குப் போய் வந்தவனுக்கு வரப்போகின்ற மலேரியா காய்ச்சல் அடுத்த மாமாங்கம் வந்தாலொழிய தீராது. இந்த நிலையில் உள்ள மகாமகம் என்ன புண்ணியத்தைக் கொடுக்கும் என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

*(12.2.1933: "குடி அரசு" இதழில் தந்தை பெரியார் அவர்கள் எழுதியது)*

**தண்ணீரில் குளித்தால் பாபம் தொலையுமா?**

கும்பகோணத்தில் மகாமக உற்சவம் நடக்கப் போகிறது. அதற்குத் திராவிட மக்களை வரும்படியாகக் கும்பகோணம் பார்ப்பனர்களால் அழைப்புக்குமேல் அழைப்பு விடுத்த வண்ணமாக விளம்பரங்கள் காணப்படுகின்றன. பார்ப்பனப் பத்திரிகைகள் மாமாங்கத்தைப் பற்றிப் பிரமாதப்படுத்தி மக்களை அங்குச் சேர்ப்பிக்க - தள்ளிவிட முயற்சிக்கின்றன.

இந்த 20-வது நூற்றாண்டுக்குப் பக்கத்தில் வாழும் திராவிட மக்கள் இப்படி ஒரு அறிவும், மானமும் சூன்யமான ஓர் உற்சவத்தை மதித்துக் கும்பகோணம் சென்று கூமட்டைகள் ஆவதென்றால், இதை உலகின் 8-ஆவது அதிசயமென்றுதான் சொல்லவேண்டும். கும்பகோணத்தில் இவ்வளவு கூட்டம் சேர்க்கப்படுவதற்கு மாமாங்கத்தன்று அங்கு என்ன புதிய சங்கதி காணப்படப் போகிறது என்பதை யோசிப்போம்.

அங்குள்ள மாமாங்கக் குளம் என்பது வெகுநாளாக இருந்து வருவதேயாகும். அதில் உள்ள தண்ணீரும் வெகு நாளாக இருந்து வருவதேயாகும். அப்படி இருக்க அன்று (மக நட்சத்திரத்தன்று) மாத்திரம் அக்குளத்திற்கும் தண்ணீருக்கும் எப்படிப் புது யோக்கியதையோ பெருமையோ உண்டாகிவிடும் என்பதை அறிவுள்ள மனிதன் யோசித்துப் பார்க்க வேண்டாமா?

தமிழனின் மதிஈனத்தைக் கைமுதலாக வைத்து வாழும் பார்ப்பனர் கூட்டம் தங்கள் வாழ்க்கைக்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக எதைக் கற்பித்தாலும், தமிழன் அதற்கு அடிமையாவதென்பது இழிவான காரியமில்லையா?

**அந்தக் குளத்தின் விஸ்தீரணமோ சுமார் 500 அடி சதுரம் இருக்கலாம். அடி மட்டம் சுமார் 200 அடி சதுரம் இருக்கலாம். இதில் இலட்சம் பேர்கள் குளிப்பது என்றால் எப்படிச் சாத்தியமாகும். அந்தக் குளத்தில் இறங்கி அந்தச் சேற்றில் கொஞ்சம் எடுத்துச் சரீரத்தில் பூசிக் கொள்ள வேண்டியதுதான். பிறகு இந்த அசிங்கம் போவதற்கு வேறு குளத்தில் குளிக்க வேண்டியதுதான்.**

12 வருடத்திற்கு ஒருமுறை அந்தக் குளத்தில் நீர் பொங்கி வருவதாக நேரில் பார்த்ததாகவே சிலர் கூறுகிறார்கள். தண்ணீரை நெருப்பில் வைத்துக் காய்ச்சினாலல்லாது, பொங்குகிற வஸ்துவைப் போட்டாலல்லாது தண்ணீர் எப்படிப் பொங்க முடியும்? மாமாங்கத்தினத்தன்று தண்ணீர் குளத்தில் விட்டு வைத்த அளவுக்கு மேல் அதிகமாகக் காணப்படுவதாகச் சில பார்ப்பனர்கள் கதை கட்டி விடுகிறார்கள்.

மக்களைத் தண்ணீருக்குள் இறங்கவிடாமல் தடுத்து நிறுத்திப் பிறகு தண்ணீரைப் பார்த்தால், அப்போது அது பொங்குகிறதா இல்லையா என்பதின் உண்மை கண்டு பிடிக்க முடியும். அப்படிக்கில்லாமல் பதினாயிரக்கணக்கான மக்களைக் குளிக்கவிட்டு அதன்பிறகு தண்ணீர் அதிகமாகி இருக்கிறது என்று சொன்னால் அதை எப்படித் தண்ணீர் என்றே சொல்ல முடியும்?


குளிக்கப் போகும் மக்கள் அந்தக் குளிரில் தங்கள் சிறுநீரைக் கழிக்க அந்தக் கூட்டத்தில் குளக்கரையில் எங்கு இடம் காண முடியும்? ஆதலால் குளிக்கிறவர்கள் அவசர அவசரமாகத் தண்ணீரில் இறங்கி அங்கு நீர்கழிக்க ஏற்பட்டு விடுவதன் மூலம் குளத்தின் தண்ணீர் பெருகி இருக்கலாம். அந்தச் சிறுநீரின் தன்மையால் குளத்தில் குமிழிகள் காணப்படலாம். அன்றியும் மக்கள் ஏராளமாகத் தண்ணீரில் இறங்குவதாலும் தண்ணீரின் மட்டம் உயர்ந்து இருக்கலாம்.

இந்த மாதிரிக் காரணங்களால் தண்ணீர் மட்டம் 4, படிக்கட்டுகளுக்கு உயர்ந்துவிட்டால், அதைப் பொங்கிற்று என்று சொல்லுவது அறிவுடைமையாகுமா என்று கேட்கிறோம். எனவே, இந்த மாமாங்கப்புரட்டுப் பார்ப்பனர்கள் பிழைக்க ஏற்படுத்திக் கொண்ட ஒரு சுங்கச்சாவடிக் கட்டுக்கதை அல்லாமல், இதில் ஏதாவது நாணயமோ, உண்மையோ, அறிவுடைமையோ இருக்க இடமிருக்கிறதா?

இதற்கும் பார்ப்பனப் பத்திரிகையுடையவும், காங்கிரஸ்காரர்களுடையவும் விளம்பரம் ஒருபுறமிருக்க, காங்கிரஸ்காரர்கள் அதைத் தங்கள் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளச் செய்யும் சூழ்ச்சி ஒருபுறம் இருக்க, இரயில்வேக்காரருடைய விளம்பரம் வேறு ஒரு பக்கம் இருந்து வருகிறது.

இந்த வருஷம் மாத்திரம் "சண்டை நெருக்கடி காரணமாக இரயில் விட முடியாது" என்று சொல்லுகிறார்கள் என்றாலும், அந்த விளம்பரத்தின் மூலம் மக்களுக்கு மாமாங்கத்தை ஞாபகப்படுத்திக் கொண்டுதான் வருகிறார்கள். இரயிலுக்கு எப்படியும் சென்ற மாமாங்கத்திற்குக் கிடைத்த வரும்படிக்குக் குறையாமல் வரும்படி கிடைக்கத்தான் போகிறது. இரயில்வே சிப்பந்திப் பார்ப்பனர்களுக்கும் "பிரைஸ்" அடிக்கத்தான் போகிறது.

மற்றும் பார்ப்பனர்களுக்குக் காப்பிக் கடை, ஓட்டல், தங்குமிடவசதி, பாட்டுக் கச்சேரி, சினிமா முதலிய காரியங்களானாலும், தர்ப்பணம், சங்கல்பம் முதலியவையானாலும் மற்றும் பல சிங்காரச் சிற்றின்



தஞ்சை வட்டார நவக்கிரக கோவில்களை வைத்து தமிழக சுற்றுலாத்துறை வெளியிட்டுள்ள விளம்பரம். மூடநம்பிக்கைக்கு அரசே பிரச்சாரம் செய்யும் கேவலம்.


படிப்பகம்

www.padippakam.com


பக்காரியங்களாலும் இரும்பு, நூல், ஜவுளி வியாபாரிகள் அடித்த கொள்ளை இலாபத்தைப் போல இலாபம் கிடைக்கத்தான் போகிறது. கடைசியில் கெட்டு நட்டமடைந்து இழிவடைந்து முட்டாள்களாகத் திராவிட மக்கள்தாம் ஆகப்போகிறார்கள்.

**மனைவி மக்கள் இடிபடவா?**

மற்றும் தன் மனைவி மக்களை ஒரு மீட்டிங்கிற்கும், கான்பரன்சுக்கும் அனுப்பக் கூடப் பயந்து நடுங்கியவனும், உறைபோட்டு அறைக்குள் பூட்டி வைத்துப் பூட்டை இழுத்து இழுத்துப் பார்த்துவிட்டு வெளியில் போய் வருகின்றவனும் கூடத் தன் மனைவி மக்களை மாமாங்கத்திற்குக் கூட்டிக் கொண்டு போய்க் கூட்டத்தில் சிக்க வைத்து நசுக்குண்டு பஞ்சாமிர்தம் போல் ஆவதைப் பார்த்து, ''கழுத்து பத்திரம், காது பத்திரம்'' என்று மாத்திரம் உரத்துக் கூறிக் கொண்டு இழுத்து வரப் போகிறான் என்பதைத்தவிர, மாமாங்கத்தின் முடிவு வேறு என்னவாக இருக்க முடியும்?

இந்தச் சர்க்கார் மனுதர்ம, புராண ஆட்சி சர்க்காராய் இல்லாமல் இருக்குமானால், இப்படிப்பட்ட முட்டாள்தனமான காரியங்களுக்கு மக்களை ஆளாக்காமல் மாமாங்கம் நடத்தக் கூடாது என்று 144 உத்திரவு போட்டு அதற்குப் பதிலாக ஓர் உலகக் கண்காட்சியை நடத்தச் செய்து இருக்கும். ''மக்கள் மடமையாய் இருக்கும்வரை அரசருக்கும் ஆரியருக்கும் ஆதாயம்'' என்கிறது சாணக்கியக் கொள்கை. ஆதலால் அறிவு வளர்ச்சிக்கும் சர்க்கார் தக்கது செய்யாமல் மாமாங்கம் முதலியவற்றுக்கு ஆதரவளித்து வருகிறது.

எப்படி இருந்தாலும் இந்த மாமாங்கத்திற்குத் திராவிடர் மக்கள் சிறப்பாகத் தமிழ்மக்கள் செல்லாமல் அதை வெறுத்துத் தள்ளி, போகிறவர்களுக்கும் விவரம் சொல்லி எவரையும் போகாமல் தடுத்துவிட வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

மாமாங்கக் கதையை நம்புவது கேடு! மதிகேடு!! என்று சொல்லுவதோடு, அங்குச் செல்லுவதும் தமிழ் மகனுக்கு (திராவிடனுக்கு) மானக்கேடு! மானக்கேடு!! மானக்கேடு!!! என்று பல தடவை சொல்லுவோம்.

(17.2.1945, *''குடி அரசு''* இதழில் ***தந்தை பெரியார்*** அவர்கள் எழுதிய தலையங்கம்.)

●

# ஆணவப் படைப்பாளியும் அடிமை ரசிகையும்

கடவுள், காதல், காக்கை குருவி, தேசபக்தி, தத்துவம், மாயை என்று சகலமும் பாடி, வாழ்வின் சகல சுவையுணர்வுகளையும் அனுபவித்து வாழ்ந்த பாரதியின் 'கொண்டாட்ட ஆளுமை' தமிழகத்தின் படைப்பாளிகளுக்கு மிகவும் பிடித்த ஒன்று.

படைப்பாளியின் பெருமையை விட்டுக் கொடுக்காத பாரதியின் 'கம்பீரம்', பாவம் பார்த்து பாரதிக்குச் சகலமும் உதவிய பிரமுகர்களின் ரசிக பக்தி உருக்கம் இவையும் மேற்படியில் சேரும். எழுதுகோல் எடுத்து, கண்மூடி, நெற்றி சுருக்கி, படைப்பவஸ்தையில் காட்சி தர விரும்பும் எழுத்தாளர்கள் பலர் தங்களைப் பற்றிய இலக்கணமும், இன்பக் கனவும் ''இதுதான் இதேதான்'' என்கின்றனர்.

தங்கர்பச்சான் செதுக்கியிருக்கும் எழுத்தாளர் நலங்கிள்ளியும் அப்படித்தான். காவிரிக்காக பத்மஸ்ரீ மறுப்பு, தமிழில் குடமுழுக்கு நடத்தச் சிறைவாசம், மக்களுக்கு இடையூறு செய்வதாய் பாதையோர வியாபாரிகள் மீது ஆவேசம், உக்கிரமாய் எழுதும் நள்ளிரவுத் தருணங்களில் தலையிடும் தடைகள் மீதான கோபம், இரவில் மது, மாதுவுடன் சரசம், குடியிருக்க பங்களாவும், ஊர்ந்து போக காரும் தரும் வசதியான அன்பர்கள், உடனிருந்து பணிவிடை செய்யும் எடுபிடி ரசிகர்கள், குயில், மயில், கன்றுக்குட்டி, மண்பாண்டம், பொம்மை, காற்று இன்னபிற பசுமை நேசம், பணம் கொடுத்து தேதிக்குக் கதை கேட்கும் பத்திரிக்கை மீதான தார்மீகக் கோபம், படைப்பைப் பார் படைப்பாளியைப் பார்க்காதே என்று கூவும் தனி மனிதச் சுதந்திரம்....

நடிகர் பார்த்திபனுக்கு எழுத்தாளர் நலங்கிள்ளி அவதாரத்தை மறந்து இயல்பு நிலை திரும்பப் பல நாட்களாயிற்றாம். ஏன் ஆகாது? அவர் மட்டுமல்ல, படைப்பாளிகள் பலருக்கும் நலங்கிள்ளி என்பவன் வெறும் திரை நிழல் அல்ல; பின்தொடரும் சொந்த நிழல். அந்த நிழலில் இளைப்பாறவே அவர்கள் விரும்புகிறார்கள்.

இத்தகைய படைப்பாளிகளின் மன நிலை என்ன? தங்களுடைய எழுத்துத் தவம் மற்ற வேலைகளை விடவும் மிக உயர்ந்தது; அதனால் படைப்பாளிகளே உன்னதமானவர்கள்; ஒரு படைப்பாளியை சமூகம் எப்படி நடத்துகிறது என்பதே அதன் தகுதியின் அளவுகோல்; உறவு - நட்பு - வாசகர் முதலானோர் ஒரு படைப்பாளியை குழந்தை போல் பாராட்டிச் சீராட்டுவது அவசியம்; படைப்பாளி சொல்லும் நீதி நியாயங்களைக் கேட்டு நடப்பதற்கு சமூகத்திற்குக் கடமை உண்டு; படைப்பாளியின் தனிப்பட்ட வாழ்வு குறித்துச் சமூகம் கேட்பதற்கு உரிமையில்லை. இத்தகைய 'தெய்வப் பிறவி' மனஓட்டம் உண்மைதான் என்பதை படைப்பாளிகளின் சமூக உணர்வு முதல் அந்தரங்கம் வரை அனைத்து நடவடிக்கைகளிலும் உணரலாம்.

இந்தப் படைப்பாளிகளின் சமூக உணர்வு சாதாரண மக்கள் மீதான அக்கறையிலிருந்து பிறப்பதில்லை, மாறாக அந்தப் பாமரக் கூட்டத்திற்குப் புத்தி சொல்லியே ஆகவேண்டிய 'மேதைமை'யிலிருந்து கொட்டுகிறது. தப்பாட்டக் கலைஞனின் சோகக் கதையினால் உருகி தமிழ்க் குடமுழுக்குக்காகச் சினந்தெழும் நலங்கிள்ளி, பழனி நகரின் பாதையோர வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் நடுத்தர வர்க்கக் குரலில் அவர்களைக் கேவலப்படுத்துவது ஒரு எடுத்துக்காட்டு.

அதனால்தான் அநேக படைப்பாளிகளின் சமூக - அரசியல் கண்ணோட்டம் என்பது அதனளவிலேயே முரண்பாடுகளின் மொத்தமாக இருக்கும். அவ்வப்போது அற்பஉணர்வுகளுக்கு அடிபணிந்து பேசும் இந்த திமிரான உளறல்களை வைத்து பல படைப்பாளிகள் தங்களைச் 'சுதந்திரமானவர்கள்' மற்றும் சமூகப் பொறுப்புள்ளவர்கள் என்று கருதிக் கொள்வது நல்ல கேலிக்கூத்து!

**குடி, கூத்து, காக்கை, குருவி, நேசம் போன்ற பம்மாத்துக்கள் எழுத்தாளர்களை ரசனையானவர்கள் என்று காட்டிக் கொள்வதற்கு மட்டுமல்ல, அவர்களது ரசனையே அப்படித்தான் இருக்கிறது.**


படிப்பகம்

www.padippakam.com

எழுத்தாளர் ஜெயகாந்தன்
அமெரிக்காவை சோசலிச
ாடு என்று புகழ்ந்ததும், சுந்த
ராமசாமி அமெரிக்காவை
றந்த ஜனநாயக நாடு என்று
ான்றளித்ததும் மேற்படியில்
சேரும். மக்களை நேசிப்ப
ும், அவர்களிடமிருந்து கற்
ுக் கொள்வதும், அதன்மூலம்
படைப்பாற்றலை வளர்த்துக்
கொள்வதும் ஒன்றுக்கொன்று
ிரிக்க முடியாதது. முதலிரண்
ில் எதிர்மறையாக இயங்கும்
அநேக படைப்பாளிகள் தமது
படைப்பாற்றலை விரைவி
லேயே இழந்துபோவது ஆச்ச
ியமல்ல.

ஜெயகாந்தன் 20 ஆண்டு
களாக எழுதமுடியாததும், சுந்
தரராமசாமி 20 ஆண்டு
களாக எழுதியதையே திரும்ப
எழுதுவதும் அமெரிக்கா பற்றி
அவர்களது புகழுரையும்
மேற்கண்ட தருக்கத்தின்படி
அப்படித்தான் முடியும்!

அடுத்து, எழுத்தாளர்கள்
வாழ்க்கையை 'ரசனை'யுடன்
அனுபவிப்பது குறித்து பார்ப்
போம். வாழ்க்கை எனும்
இயக்கம் முன்னேற்றம் எனும்
ஒளியை நோக்கி தட்டுத் தடு
மாறிப் போக எத்தனிக்கும் தருணங்
களை அவர்கள் விரும்புவதோ, அறி
வதோ, முயல்வதோ இல்லை. மாறாக,
அதன் எதிர்நிலையான பின்னோக்கிப்
போக விரும்பும் இறந்தகால இளைப்
பாறுதலே அவர்களுக்கு விருப்பமாக
வும், தேவையாகவும், பாதுகாப்பாக
வும் இருக்கிறது. அத்தகைய எழுத்
தாளர்களின் அழகியல் குறித்த கண்
ணோட்டத்தின் ஆன்மா இங்கேதான்
சோம்பலுடன் பதுங்கியிருக்கிறது.

குடி, கூத்து, காக்கை, குருவி, நேசம்
போன்ற பம்மாத்துக்கள் எழுத்தாளர்
களை ரசனையானவர்கள் என்று காட்
டிக் கொள்வதற்கு மட்டுமல்ல, அவர்
களது ரசனையே அப்படித்தான் இருக்கி
றது. இதில் இந்த உலகின் 'அழகை'
நான் மட்டுமே பார்க்கிறேன் என்பதும்,
இது மட்டுமே அழகு என்பதும், இந்த
'அழகுகளை' நுகர சமூகம் ஏற்பாடு
செய்யவேண்டும் என்பதும் சில 'அ
ழகு'களை நுகருவதை ஒழுக்கக்கே
டான விசயம் என்று பார்க்கக் கூடாது
என்பதும் சேர்ந்திருக்கிறது.

''படைப்பைப் பார் படைப்பாளி
யைப் பார்க்காதே'' என்ற நலங்கிள்ளி



யின் அந்தப் புகழ்பெற்ற மூதுரை கூட படைப்பை மேற்கண்ட அழகியல் - நுகர்வுக் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்கக் கோருகிறது. ஒரு படைப்பை மாபெரும் சமூக இயக்கத்தின் ஒளியில் வைத்து உணரும்போது அங்கே படைப்பாளியும் இருக்க வேண்டியிருக்கிறது;

அதாவது, மக்கள், சமூகம், போராட்டம், புரட்சி, கட்சி, சோசலிசம், கம்யூனிசம் போன்ற சொற்கள் அல்லல்படும் வாழ்க்கையை மாற்றுவது குறித்துச் சிந்திக்கும் விசயமாக இருப்பதால் ஒரு எழுத்தாளனுக்கு அசிங்கமாக இருக்கிறது. மாறாக ஒரு ஃபுல் அடித்துவிட்டு பரப்பிரம்ம நிலையடைந்து அந்த 'அசிங்கங்களை'க் கேலி செய்வது அவனுக்கு அழகாகவும், முக்கியமாகச் சுலபமாகவும் இருக்கிறது. எனவேதான் வாழ்க்கையை அற்பஉணர்வுகளின் சங்கமமாக உணரும் ஒரு எழுத்தாளன் தன்னையும், தன் அழகியலையும், தன் சுதந்திரத்தையும், தன் சமூகக் கடமையையும் அவ்வாறே உணர்கிறான்.

நலங்கிள்ளியைச் சிறுபிராயத்திலேயே பிரமிப்புடன் ரசிக்கும் சிறுமி தாமரைச்செல்வி வளர்ந்து அவனையே தெய்வம்போலக் கருதி, உருகி, வழிபட்டு, உறவு கொண்டு, குழந்தை பெற்று, தமிழ்நாடு முழுக்க அலைந்து, ஓய்ந்து சாகும்போதும் பக்தையாகவே சாகிறாள். 'கணவனே கண் கண்ட தெய்வம்' படத்தில் தொழுநோயாளிக் கணவனைத் தலையில் சுமந்து செல்லும் அந்தக் காலத்துக் கற்புக்கரசியை விட இந்தத் தாமரைச்செல்வியைக் கேவலமாகப் படைத்துத் தவிக்கவிட்டு இதை இன்னொரு ஆண்டாள், லட்சம் கோடியில் ஒரு பெண் என்று தங்கர் பச்சான் பெருமையடிப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது.

ஆரம்பத்திலேயே கன்னத்தில் இரண்டு அறைவிட்டுத் திருத்தப்பட்டிருக்க வேண்டிய இந்த அப்பாவிப் பெண்ணை இவ்வளவு கேவலமான ரசிகை எனத் தெரிந்தும் விரும்புகிறானே நலங்கிள்ளி அதுதான் அந்தப் படைப்பாளியின் ஆளுமை பாசிசத்தோடு தொடர்புடையது என்பதை நிரூபிக்கிறது. ஒரு ரசிகனை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதை வைத்து ஒரு படைப்பின் தரத்தை அளவிடலாம். இங்கோ ஒரு அப்பாவி ரசிகை அடிமையாக மாறுவது கொண்டாடப்படுகிறது.

''படைப்பைப்பார் படைப்பாளியைப் பார்க்காதே'' என்ற திமிர் முழக்கம் ''என் ரசிகையின் பக்தியைப் பார்'' என்று ஒரு ஆண்டானின் பெருமிதமாக மாறுவது முரணில்லை. ஆக, தனது சக மனிதன் ஒருவன் ஒரு நாயைப் போல வாலைக் குழைத்து நாக்கு நீட்டி, நீர்விட்டு நன்றி பாராட்டுவதை ஒரு படைப்பாளி விரும்புகிறான் என்பதை ஜெயலலிதா, ஹிட்லர் வகையறாக்களை மட்டும் பாசிஸ்டுகள் எனக் கருதும் வாசகர்கள் சிந்திக்க வேண்டும்.

இது மிகையான கூற்றல்ல என்பது, பழனி மடத்து மதிய உணவுப் பந்தியில் நலங்கிள்ளி விட்டுச் சென்ற எச்சிலையை ஒரு குழந்தை போல எடுத்து கண்களில் ஒத்தி தாமரைச் செல்வி கதறுகிறாளே, அப்போது 'ஐயோ' என்று தலையில் அடித்துவிட்டு திரையரங்கை விட்டு ஓடி வந்தபோது எங்களுக்கு உறைத்தது.

உங்களுக்கு?

● **வேல்ராசன்**



படிப்பகம்

www.padippakam.com

# உளுந்த வடைக்குள்ளும் ஒளிந்திருக்கும் முதலாளித்துவம்

**சோ**ப்பு, சீப்பு பவுடர் என கடைகளுக்கு சப்ளை செய்யும் அன்னக்கிளி ஏஜன்ஸீஸ். இந்த மாதிரி இடங்களில் வேலை வாங்கும் விதம் சிறு உடைமையாளர்களின் அற்ப குணங்கள் அனைத்தையும் தரிசிக்கும்படி இருக்கும்.

அங்கு அண்ணன் தம்பி இருவரும் முதலாளிகள். இவர்களது நைச்சியமான சுரண்டலுக்கு கங்காணி போல ஒரு மேனேஜரும் உண்டு. இவர்களுக்குள் ஒருங்கே பேசிவைத்துக் கொண்டு பெரியவரு கோவக்காரரு, சின்னவரு ஜாலிடைப் என்று தொழிலாளிகளிடம் இரண்டு முகமூடிகளைக் காட்டி வேலை வாங்குவார்கள்.

''பாத்துப்பா... வேல இல்லனா ரூமுகுள்ளேயே போயி உக்காந்துக்காத. பவுடர் டின்னு பாக்ச தொடச்சி வையி. மொதலாளியே குளிருதுன்னு பேன ஆப் பண்ணிர்றாராம். நீ ஸ்டாக் ரூம்ல பேன போட்டுகிட்டு சும்மா ஒக்காந்திருக்கியாம். பெரியவரு ஒன்னுக்குப் போறப்ப ஜாடையா பாத்துருக்காரு. ரொம்ப கோவப்பட்டாரு. அப்புறம் சின்னவருதான் ஸ்விச் கட்டைய புடுங்க வேண்டாம்னு சொல்லி விட்டு வச்சிருக்காரு. பாத்து வேலயகீலைய செய்யி. வாங்குற சம்பளத்துக்கு மனச்சாட்சியோட இரு. புரியுதா,'' மேனேஜர் கடிந்து கொள்ள ஆரம்பித்தார்.

கம்பெனியே சரக்கு வந்து எறங்காமல் இருக்கும் போது தொழிலாளிகளுக்கு இயல்பிலேயே வேலை இல்லாத சூழ்நிலை நிலவும். இருப்பினும் ஏதாவது ஒரு வேலை செய்யாமல் தொழிலாளிகளைப் பார்த்தால் முதலாளிக்கு எரிச்சலாய் வரும். ''ஸ்டாக் ரூமுல பூந்துகிட்டு அங்க என்னடா பண்றீங்க? வந்து இந்த நிலப்படிய தொடய்க்கிறது. ஏறிக்கிட்டு போறீங்கள்ல? வந்து சைக்கிளத் தொடச்சி கிடச்சி எண்ணெய் போட்டா தான சைக்கிள் ஆண்டுவரும், போறதும் ராஜா மாதிரி போவலாம்?'' ஓவர் லோடு வைத்து சைக்கிள் மிதித்து மிதித்து விரைவீக்கம் வந்து அதக்கிக் கொண்டு நகர்கையில் எங்கே ராஜா மாதிரி போவது? சின்ன மொதலாளி ஜாலிடைப் என்ற சாயம் அப்போதுதான் வெளுக்கும்.

விரட்டியவிரட்டில் எல்லோரும் சைக்கிள் பக்கம் ஓட ''ஆமாண்டா மூனு சைக்கிளுக்கு அஞ்சி பேரு போங்க, சரியான முட்டாப் பசங்கடா. மேனேஜர், உள்ளார தொடைக்கச் சொல்லுங்க'' என்று திரும்பவும் விரட்ட, என்ன செய்வதென்று புரியாமல் ஒருவன் நிலைப்படியை அவசரமாகத் துடைக்க, நிலைப்படி கிடைக்காதவர்கள் ஓடிப் போய் ஸ்டாக் ரூமில் துடைத்த டப்பியையே துடைத்துக் கொண்டிருப்பார்கள்.

●●

**சி**ன்ன முதலாளி ஜாலி என்பது வேறொன்றுமில்லை. சில நேரங்களில் பேப்பரைப் படித்துக் கொண்டே தொழிலாளர்களை ஆசையோடு அழைப்பார். ''முருகேசா, இந்த அதிகாரிகளையெல்லாம் சுட்டுப் பொசுக்கனுண்டா. பாதி பேரு வாழவே முடியல'' என்று பந்தாவாகப் பேசுவார். அவர் போன பிறகு பேப்பரைப் பிரித்துப் பார்த்தால், ''வணிக வரி உயர்வு, புதிய விகிதத்தில் வருமான வரி'' என்று ஏதாவது போட்டிருக்கும். சில நேரங்களில் தானாகவே தலையை அழுத்தமாக ஆட்டிக் கொண்டு சத்தம் போட்டுப் பேசுவார். ''வச்சான் பார்றா சரியான ஆப்பு. சும்மா வேலக்காரப் பயலுவல்லாம் இலாபத்துல அவ்வளவு கொடு, இவ்வளவு கொடுன்னு கேட்டா? போட்டாம் பாரு சரியான ரூல்ஸா'' என்று யாரையும் கூப்பிடாமலேயே வேலை செய்யும் தொழிலாளிகளையே வெறித்து வெறித்துப் பார்த்துத் தலையை ஆட்டுவார்.

இம்முதலாளிகளின் தொழிலாளர் விரோத நடவடிக்கை சம்பளப் பட்டு

வாடாவில் மட்டுமல்ல சாப்பிடு
போண்டா வரை நீளும். சாயங்கால
ஆகிவிட்டால் குமாரு என்று கூப்பிட்
''பெரியவரும், சின்னவரும் இருக்காங்க
போய் அந்த வழக்கமான கடையில
நாலு செட்டு போண்டா வாங்கியாந்
அப்படியே பிளாஸ்க்ல ஒரு மூணு டீ
வாங்கிக்க. பாக்கி நாலணா வரும்
சின்னவரு ஒன்னைய வச்சிக்க சொல்லி
டாரு. என்ன முழிக்கிற? மேனேஜரவி
ஓங்களுக்குத் தாண்டா சலுக காட்டுறாரு
நீங்க என்னடான்னா ஒரு பத்து நிமிஷ
இருந்து வேலய பாத்துட்டுப் போங்க
டான்னா முனகுறீங்க... போ....போ''

பார்சல் வந்த உடனேயே இரண்டு
முதலாளிகளும் மேனேஜரும்
ரூமுக்குள் நுழைவதுதான் தெரியும். ஒரு
இருபது நிமிடம் கழித்து மானேஜ
மட்டும் வருவார். ''போங்கடா உங்க
ளுக்கு ஒரு செட்டு பஜ்ஜி சேர்த்து வாங்கி
யாந்துருக்கலாம்னு பெரியவரு கூட
சொன்னாரு. நல்லா இருந்திச்சி போல
ருக்கு, மிச்சம் வெக்காம ரெண்டு பேரும்
சாப்பிட்டுட்டாங்க. எனக்கே ஒன்னும்
கெடக்கலேன்னா பாத்துக்கோயன்.'
என்று எதிர்பார்ப்பிலிருக்கும் தொழிலா
ளிகளிடம் அவர் ரெடிமேடா பதில்
சொல்லிக் கொண்டிருக்கும் போது
'ப்பே...' என்று தவிர்க்க இயலாமல்
புளிச்ச ஏப்பம் வந்துவிடும்.

''இந்த டீயாவது குடிக்கட்டும்னு
குடுத்தாரு. இந்தாங்கடா ஆளுக்கு
கொஞ்சம் ஊத்திக் குடிங்க''. அதை
வாங்கிப் பார்த்தால் ஒரு வாய்க்குக் கூட
பத்தாது. ''வீட்டுக்குப் போய் சாப்பிடுற
நேரம். டீயக் குடிச்சி வயித்த கெடுத்
துக்காதிங்க, தலைவேற நரச்சுப்
போய்டுண்டா. அந்த வயசானவர்ட்ட
கொடுங்க'' என்று கொசுறாய் வேறு தக
வலை உதிர்ப்பார்.

அது ஒரு நாள் கூத்து என்றால் தொழி
லாளர்களுக்கு போண்டா வரை தராம
லிருக்கும் தந்திரம் வேறு ஒரு நாளில்
வேறு மாதிரி ஆரம்பிக்கும்.

''ஏண்டா முருகேசா எந்தக் கடையில
போயிடா வாங்கிட்டு வந்த?''

''வழக்கமான கடையிலதாங்க''

''என்ன வழக்கமான கட? ஒரே காரல் நாத்தம். பெரியவரு தூக்கி எறிஞ்சிட்டாரு. சின்னவரு சத்தம் போடுறாரு. நடக்க அலுப்பு பட்டுகிட்டு கண்ட கடையிலேயும் போயி வாங்கிக்கிட்டு வந்திட்டியா? வாயில வெக்க முடியல. இருவது ரூவாய்க்கு வாங்குனது அப்படியே குப்பத்தொட்டில போட்டாச்சு.


படிப்பகம்

www.padippakam.com

சொன்னத உட்டுட்டு நீங்க ஒன்ன ஏண்டா செய்றீங்க? அங்க வாயேன், உள்ளாற வந்து பாரேன். அப்படியே கெடக்குது பாரு குப்பத் தொட்டில.''

போட்டு வாங்குற வாக்கில் தொழிலாளிகள் வடையும் வேண்டாம் பஜ்ஜியும் வேண்டாம் என்று பிய்த்துக் கொண்டு ஓட ஆரம்பித்துவிடுவார்கள். குப்பை கொட்ட கூடையை எடுக்கும் போதுதான் தெரியும், அங்கு வடையும் இருக்காது, பஜ்ஜியும் இருக்காது. வடை பஜ்ஜிக்கு ஏங்குபவர்களை அதைப் பற்றிச் சிந்திக்க விடாமல் விரட்டுவதற்கு இது ஒரு தந்திரம்.

''மேனேஜர் சார், மேனேஜர் சார்'' என்று முதலாளிகள் அழைக்கும் கங்காணிப்பயலும் சம்பளத்துக்கு வைக்கப் பட்ட ஆளல்ல, அவர்களது சகலை என்பது பிற்பாடு தெரிந்தபோது அதிர்ச்சியானது. உறவுகளையே மறைத்து வைத்துத் தொழிலாளிகளை வேலை வாங்கும் முதலாளிகளுக்கு உளுந்து வடை எம்மாத்திரம்?

பத்துமணி நேரம் வேலை வாங்குவது மட்டுமல்ல. இரவு ஒன்பது மணிக்குக் கடையைச் சாத்திப் புறப்படும் போது ''ஆறுமுகம்! அப்படியே போற வழில சுங்கான்கேட்ல அந்த தீன் ஸ்டோர்ல ஒரு செக் தருவாரு. வாங்கிட்டு அப்படியே போ. சைக்கிள் எடுத்துட்டுப்போ, என்ன. காலைல செக்க பேங்ல போடணும். காலைல காட்டியும் சீக்கிரம் வந்துடு. உனக்காக பேங்கு போற ஆளு காத்திருக்கணும். அப்புறம், அப்படியே காலைல வர்றப்ப அந்தப் பரமசிவன் ஸ்டோரு, கணபதி புள்ள கடை ஏதும் ஆர்டர் கீடர் இருக்கான்னு அப்படியே தடவிக்கிட்டு வந்துரு. சரி.. நீ கடை சாத்துற வரைக்கும் இருக்க வேண்டாம். ரெஸ்ட் எடுத்துகிட்டு அப்படியே ஜம்னு வா பாக்கலாம்.''

முதலாளி பேசி முடிப்பதற்குள்ளேயே மணி ஒன்பதரையாகும். அதற்குமேல் தீன் ஸ்டோருக்குப் போய் செக் வாங்க நின்றால் ''இருய்யா, கல்லா கட்டுற நேரத்துல நீ வேற வந்து நிக்கிற ''என்று சாவகாசமாக ஒரு செக் போட்டு கிழித்துக் கொடுத்து பால்ரஸ் தேய்ந்த சைக்கிளை மிதித்துக் கொண்டு போய்ப் படுப்பதற்குள் மணி பதினொன்று ஆகி விடும்.


''என்னங்க, போய்ப் படுத்தா பொண்டாட்டியோடயும் பேச முடியல, புள்ளயோடயும் பேச முடியல, காலைல வேலைய மறந்துடக்கூடாதுன்னு முதலாளி சொன்னதே கனவு வரைக்கும் வருது'' என்று ஆறு முகம் அடுத்த நாள் சொல்லும்போது நான் சைக்கிளில் வைத்து மிதிக்கும் பாரமெல்லாம் சாதாரணமாகிவிடும்.

●●

முதலாளிகள் தொழிலாளியின் வயிறை வேண்டுமானால் காலியாய் வைப்பார்கள். ஆனால் அவர்களது மூளையை அவ்வாறு வைத்துக் கொள்ள அனுமதிப்பதில்லை. அடுத்த நாளில் தனக்கான வேலைகளைக் கொண்டு அதை நிரப்பி விடுகிறார்கள்.

தொழிலாளர்கள் உழைப்பைச் சுரண்டுவது மட்டுமல்ல. அச்சக வேலை செய்யும் இடங்களில் ''என்னடா கெழவன் மாதிரி தள்ளிக்கிட்டு நடக்கிற'' என்று இளைஞனை பெண் பணியாளர்களுக்கு மத்தியில் வக்கிரமாகப் பேசி அவனது உணர்வுகளைச் சீண்டுவது, சில இடங்களில் ''என்னடா ஆறுமுகம் படுக்க பதினோருமணி ஆவுதுங்குற, கட கடன்னு நாலு புள்ளைய பெத்துட்ட, நேரத்தோட போனாலும் நமக்கெல்லாம் ஒரு புள்ளையோட நிக்குது'' என்று உரிமையாகப் பேசுவது போல உரிமை மீறி உணர்வுகளை ஒடுக்குவது என பல துயரங்கள், பல அனுபவங்கள்.

● **துரை. சண்முகம்**





படிப்பகம்

www.padippakam.com

# விற்பனையில் காதலர் தினம்!

**கா**தலுக்குக் கண்ணில்லை என்றாலும், நாலு காசு, இல்லையில்லை 2500 கோடி ரூபாய் சம்பாதிக்கலாம் என்கிறார்கள் இந்திய முதலாளிகள். பிப்ரவரியில் ஒருநாள் மட்டும் வரும் காதல் தினம்தான் மேற்படி வருமானத்தை அள்ளித் தருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு வரை நாம் கேள்விப்பட்டிராத இந்த தினம் இன்று ஏதோ பல்லாண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வரும் ஒரு பாரம்பரியப் 'பண்டிகையாக' மாற்றப்பட்டுவிட்டது. அந்த மாற்றத்தின் அடிப்படை, நுகர்வுக் கலாச்சாரத்தின் சந்தையோடு பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டிருக்கிறது.

காதல் வயப்படும் இளைஞர்களிடம் முதலில் தயக்கம், அப்புறம் மயக்கம், கிறக்கம், கலக்கம், நீண்ட கனவுகள் எல்லாம் நீக்கமற நிரவியிருக்கும் சமாச்சாரங்களாகும். வரலாற்றில் காதல் தோன்றிய நாள் முதல் நம்மூர் கருப்பு - வெள்ளை சினிமா நிறுத்தப்பட்ட நாள் வரை மேற்கண்ட உணர்ச்சிகள் மட்டுமே காதலில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. தற்போதைய நுகர்வுக் கலாச்சாரக் காதலோ இந்த உணர்ச்சிகளை காதலர்கள் தங்களுக்கிடையே பரிமாறிக் கொள்ளும் பரிசுப் பொருட்களாக மாற்றிவிட்டது. எனவே பணம் இருந்தால் மட்டுமே காதலையும் வாங்க முடியும்.

மாநகரங்களிலும், பெருநகரங்களிலும் இந்தப் பரிசுக் காதல் நோய் வேகமாகப் பரவிவருகிறது. பணக்காரர்களும், மேல்தட்டு நடுத்தர வர்க்கமும் இந்தக் காதல் சந்தையுடன் முக்கிய வாடிக்கையாளர்களாக இருந்தாலும் நடுத்தர வர்க்கமும் விரலுக்கேற்ற அளவில் வீங்கி வருகிறது. பேன்சி கடைகள் முதல் பேரங்காடி வரையிலும் காதலின் மகத்துவத்தைத் தாங்கி வரும் பொருட்கள் விதவிதமாய் விற்கப்படுகின்றன. பத்திரிக்கை, தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரங்களும், காதலர்தின சிறப்பு நிகழ்ச்சிகளும், பொருட்களைத் தெரிவு செய்வதற்கும் காதலர் தினத்தைச் செலவு செய்து கொண்டாடும் விதம் பற்றியும் கற்றுத் தருகின்றன.

கையடக்க அளவிலிருந்து ஆளுயரம் வரை கிடைக்கும் வாழ்த்து அட்டைகள், உள்நாட்டிலிருந்து மட்டுமல்ல வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் அரிய பூவகைகள், சாவிக் கொத்து பட்டியலிலிருந்து பல்லாயிரம் ரூபாய் மதிப்புள்ள வீட்டலங்காரப் பொருட்கள் வரையிலான பரிசுப் பொருட்கள், அப்புறம், சிந்தையிலிருக்கும் காதல் கிளர்ச்சியை நாவிற்குக் கொண்டு வரும் காதல் சாக்லேட், காதல் கேக் இன்னபிற 'காதல்' உணவுகள் என்று இந்த 2500 கோடி ரூபாய் சந்தையின் சமாச்சாரங்கள் நீளுகின்றன.


காதலர் தினத்திற்காக சுறுசுறுப்புடன் நடக்கும் வாழ்த்து அட்டை வியாபாரம்.

பெப்சி நிறுவனம் காதலர்கள் விரும்பும் தனிப்பட்ட வாழ்த்துச் செய்திகளை பாட்டிலில் இலவசமாகப் பொறித்துக் கொடுத்ததாம். நட்சத்திர விடுதி ஒன்று காதலர் தின ஸ்பெஷலாக 'காமசூத்திரா தங்கல்' எனச் சிறப்பலங்கார அறைத் தங்கல் திட்டத்தை அறிவித்ததாம்.

பன்னாட்டு நிறுவனங்களே இவ்வளவு மெனக்கெடுகின்றன என்றால் அது காதலின் இயல்பான பலவீனம் தான். 'தாராளமயமாக்கத்தின் குழந்தைகள்' எனக் கருதப்படும் இளைய சமூகத்தை சந்தையில் பொருட்களை வாங்கத் தூண்டுவது 5 உணர்ச்சிகளாம். அதில் கடந்த 5 ஆண்டுகளாகக் காதலும், ரொமான்சும்தான் அந்த உணர்ச்சிகளில் முதலிடம் வகிக்கின்றன என்று ஒரு கருத்துக் கணிப்பு கூறுகிறது.

ஒரு பொருளை வாங்குவதற்குப் பயன்பாடும், அத்தியாவசியத் தேவையும் போய் காதலும், ரொமான்சும் முடிவெடுக்கின்றன என்றால், அந்தப் பொருட்கள் - சந்தை - சமூகம் எப்படி இருக்கும்? சமூக நலன் குன்றி தனிநபர் வாதம், காரிய வாதம் போன்ற வாத நோய்கள் வந்து நலிவடைந்துதான் இருக்கும்.

தற்போதைய நகர்ப்புறத்துக் காதலர்கள் தத்தமது துணைவர்களை விலையுயர்ந்த பரிசுகளை வாங்கித் தருமாறு தான் ஊக்குவிக்கிறார்களே ஒழிய ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்து கொண்டு நேசத்தை வளர்ப்பதையல்ல என்கிறார் தில்லியைச் சேர்ந்த ஒரு உளவியல் மருத்துவர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த மும்பை துணை நடிகர்கள் பற்றிய குறும்படம் ஒன்றில் ஒரு இளவயது துணை நடிகை தனது அவலமான வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்வாள். காதல் திருமணம் புரிந்த அவளது கணவன் வேலை ஏதும் பார்க்காமல் புகைத்தவாறும், குடித்தவாறும் சில சமயம் மனைவியை அடித்தும் நாளைக் கழிக்கிறான். இருப்பினும் அவனது தினசரிச் செலவுக்கு அவள் பணம் கொடுக்கிறாள். காரணம் ''என்ன செய்வது எனக்குத் தேவையான காதலை, அன்பை, துணையை இப்படி விலை கொடுத்துத் தான் வாங்க வேண்டியிருக்கிறது'' என்று வருத்தப்படுவாள்.

இப்போது அந்தத் துணை நடிகை மட்டுமல்ல, காதலர் தினச் சந்தையின் படி அநேகக் காதலர்கள் தங்களது காதலுக்கு விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆதலால், பணமின்றிக் காதலில்லை!

● இளநம்பி
(நன்றி: அவுட்லுக்)



படிப்பகம்

# த.மு.எ.ச.: ஈரோட்டு விரோதம்

ஈரோட்டில் 13.2.2004 அன்று 'பெரியார் - 125 விழா' தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் நடத்தப்பட்டது. விழாத் தலைவரான மேலாண்மை பொன்னுசாமி பெரியாரின் சிறப்பைக் கூறுவதற்குப் பதில் காமராஜரைப் புகழ்ந்து நீண்ட உரையாற்றி 'அப்பேர்ப்பட்ட காமராஜருக்கே... வழிகாட்டியாக இருந்தவர் பெரியார்' என்று கூறி இது காமராஜர் விழாவோ என்ற சந்தேகத்தினை வந்திருந்தவர்களுக்கு ஏற்படுத்தினார்.

பிறகு கவிஞர் அப்துல் ரகுமான் ''தேர்தலில் நின்று பதவியைப் பிடிப்பவர்கள் களவு பித்தலாட்டப் பேர்வழிகள்; சட்டசபை செல்வது என்பது கள்ளுக்கடை, தாசிவீடு செல்வது'' போன்ற சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்களைப் பற்றிய பெரியாரின் கருத்துக்களை மேற்கோள் காட்டிப் பேசினார்.

இவரின் பேச்சைக் கேட்ட நமக்கோ இவர் எழுதி வெளியிட்டுள்ள 'விதை போல் விழுந்தவன்' என்ற அண்ணாவைப் பற்றிய கவிதைத் தொகுப்பும் 'முத்தமிழின் முகவரி' என்ற கருணாநிதியைப் பற்றிய கவிதைத் தொகுப்பும் நினைவிற்கு வந்தது. இங்கு அரசியல், அரசியல்வாதிகள் பற்றிப் பேசிய அப்துல் ரகுமான் தனது தலைவர் கருணாநிதி இருக்கும் மேடையில் இவற்றைப் பற்றிப் பேசுவாரா?

நாம் இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்தபோது அடுத்த பேச்சாளரை அறிமுகம் செய்யவந்த மேலாண்மை பொன்னுசாமி ரகுமானின் பேச்சில் கொள்ளுவன கொண்டு தள்ளுவனவற்றைத் தள்ளிவிட வேண்டும் என்று நாசூக்காகத் தேர்தலில் நிற்பவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் இல்லை என்று கூறினார்.

ரகுமான் அரங்கில் இருந்து சென்ற பிறகு வேறு ஒரு பேச்சாளரை அறிமுகம் செய்ய வந்த மேலாண்மை பொன்னுசாமி ஆவேசம் வந்தவராய் தேர்தலில் நிற்பவர்களில் நல்லவர்களும் உண்டு என்று குறிப்பிட மோகன், நன்மாறன், நிருபன் சக்கரவர்த்தி போன்றோரை உதாரணம் காட்டினார். (அந்த நிருபன் சக்ரவர்த்தியைத் தானே சி.பி.எம்.மினர் பயித்தியம் என்று கூறி கட்சியில் இருந்து வெளியேற்றினர் - கட்சித் தலைவர்களின் 'கை சுத்தத் ததை'ப் பற்றி விமர்சித்ததற்காக) இலஞ்சம் வாங்காததற்குச் சில நபர்களை உதாரணமாகச் சுட்டிக் காட்டினார்.

எழுத்தாளர் அருணன் தனது பேச்சில் சோதிடத்தைப் பாடமாகக் கொண்டு வந்துள்ள இத்தருணத்தில் பெரியார் இருந்திருந்தால் 'இந்தப் பயலுகளுக்கு ஓட்டுப் போடுங்கப்பா' என்று சொல்லியிருப்பார் என்று கூறி தனது சி.பி.எம். கட்சிக்கு ஓட்டு கேட்டார்; மக்களின் பணத்தைக் கையாள்வதில் பெரியாரின் சிக்கனத்தைப் பற்றிப் பேசினார். (சென்ற தேர்தலில் இவர்கள் கொள்ளைக்காரி ஜெயாவுடன் கூட்டணி வைத்தது?) கருணாநிதியின் சன் தொலைக்காட்சியின் இராசிபலன் நிகழ்ச்சி பற்றிக் கிண்டலடித்தார். (அப்படியானால் தீபாவளிக்கும், திருவண்ணாமலை தீபத்திற்கும் சிறப்பிதழ் வெளியிடும் தீக்கதிரின் நடவடிக்கை?)

'எந்தக் கருத்தையும் தனது சொந்த மூளையில் இருந்து சொந்த வார்த்தைகளில் வெளியிடுபவர்' என்ற மேலாண்மை பொன்னுசாமியின் அறிமுகத்துடன் பேசவந்தார் நந்தலாலா.

"புதிய கலாச்சாரம்" உரிமையாளர்
மற்றும் இதர விவரங்கள் படிவம் IV (விதி 8-இன் படி)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | : எண் 3, 4-வது தெரு, செகத்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை-31 |
| 2. | வெளியிடும் காலம் | : மாதம் ஒருமுறை |
| 3. | அச்சிடுபவர் பெயர் | : இரா. சண்முகராசு |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024. |
| 4. | வெளியிடுபவர் பெயர் | : வி. வல்லபேசன் |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : எண். 3, 4-வது தெரு, செகத்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை-31 |
| 5. | ஆசிரியர் பெயர் | : வி. வல்லபேசன் |
| | இந்தியக் குடிமகனா? | : ஆம் |
| | முகவரி | : எண். 3, 4-வது தெரு, செகத்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை-31 |

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒ-ம்) வி. வல்லபேசன்.
1.3.2004 வெளியிடுபவர்.




நாகர்கோயிலில் போட்டியிடும்
சி.பி.எம். காங்கிரசின் கைக்குள் அடக்கம்.

பேச்சின் இடையில் அவர் *புதிய கலாச்சாரத்தில்* வந்த தோழர் துரை. சண்முகத்தின் கவிதையை (**''சாமி பெயருக்கு ஒரு அர்ச்சனை,** ஆலயங்களில் செருப்பு விடும் இடம், உண்டியல், அர்ச்சனை சீட்டு பெரும் இடம் என்று தமிழில் எழுதி வைத்துவிட்டு சாமிக்கு அர்ச்சனை மட்டும் சமஸ்கிருதத்திலா என்று கேட்கும் கவிதையை) தனது சொந்த பேச்சு - கண்டுபிடிப்பு போல் சொல்லி மிகுந்த கரவொலியைப் பெற்றார். தனது பேச்சின் இறுதியில் கூறிய வெண்ணிலா எழுதிய கவிதையை மட்டும் வெண்ணிலாவின் கவிதை என்று சொன்னார். இதுதான் இவர் தனது சொந்த மூளையை உபயோகிக்கும் இலட்சணம் - இவரது நேர்மையின் இலக்கணம்.

விழா நடைபெற்ற அரங்கில் ஈரோடு பு.மா.இ.மு. தோழர்கள் புத்தகக்கடை போட்டிருந்தனர். அதில் பிப் - 2004 பு.ஜ.வில் பாவல் எழுதியிருந்த 'த.மு.எ.ச.வினரின் பெரியார் வியாபாரம்' என்ற செய்தியையும், முன்பு பு.க.வில் வந்திருந்த தோழர் துரை. சண்முகத்தின் 'இது ஒரு வர்க்க ஸ்தாபனம் அல்ல' என்ற கவிதையையும் நகல் எடுத்து வினியோகித்தனர்.

இதைக் கண்டு ஆத்திரம் அடைந்த சி.பி.எம்.மினர் புத்தகக் கடையை எட்டி உதைத்து ''ஏண்டா நாங்க லட்சக்கணக்கில் செலவு செய்து விழா நடத்துவோம். அதில் நீ பிரச்சாரம் செய்வியா? நான் செலவு செஞ்சு கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தா படுக்கறதுக்கு நீ வருவியா?'' என்று தங்களுடைய 'பண்பாட்டை' வெளிப்படுத்தினர். எமது தோழர்கள் அரங்கிற்கு வெளியில் வந்து விழாவிற்கு வந்திருந்தவர்களிடம் மீதமிருந்த நகல்களை வினியோகித்து போலி கம்யூனிஸ்டுகளை விளக்கிப் பேசிவிட்டு வந்தனர்.

– பு.மா.இ.மு., ஈரோடு.




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கை:

# நாம் அறியாத டைடல் பார்க்

'டைடல் பார்க்' - கணினி பயிலும் மாணவர்கள், கற்றுத் தேர்ந்த இளைஞர்களின் ஒரு இலட்சியக் கனவு. கணினி கற்று மேலைநாடுகளுக்குப் போய்க் குடியேறத் திட்டமிட்டுள்ள இளைஞர்களின் ஏவுதளம். ஒரு இடைக்காலப் புகலிடம். அதற்கான வாய்ப்பு கிடைக்காமல் ஏங்கும் ''ஏழைகளின்'' அமெரிக்கா.

'டைடல் பார்க்' - தமிழ்நாட்டு முந்தைய ஆட்சியாளர்களின் சாதனைச் சின்னமாகக் காட்டப்பட்டது. இதை விடவும் பெரிய - ஆசியாவிலேயே மிகப்பெரிய - மின்பொருள் தொழில் மையமாக 'டைடல் பார்க்-2'-ஐ அமைத்து சாதனை புரியப் போவதாக இப்போதைய ஆட்சியாளர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். உண்மையில் இதில் இவர்களுடைய பங்கு பாத்திரம் எதுவும் கிடையாது. உலக வங்கி மற்றும் பன்னாட்டு மென்பொருள் தொழில் கம்பெனிகள் போட்ட உத்திரவுகளைத் தலைமேல் இட்டு நிறைவேற்ற ஒப்புக் கொண்டு அதிகாரிகள் நீட்டிய கோப்புக்களில் காட்டிய இடங்களில் கையொப்பமிட்டார்கள். அவ்வளவுதான்.

'டைடல் பார்க்' என்றால் என்ன வென்றே நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு ஒன்றும் தெரியாது. இதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ''வெள்ளை இனத்தவர்கள் தவிர வேறு யாரும் இங்கே நுழையக் கூடாது'' என்று நம்முடைய நாட்டிலேயே அறிவிப்புப் பலகை வைத்து நம் மக்களை இழிவுபடுத்தினார்கள் ஆங்கிலேயக் காலனியவாதிகள். அறிவிப்புப் பலகை இல்லையே தவிர அதையே நடைமுறையாகக் கொண்ட இடம்தான் 'டைடல் பார்க்'. நமது நாடு மீண்டும் அடிமையாக்கப்படுவதன் சின்னம்தான் இந்த 'டைடல் பார்க்'.

உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு சிறு - குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் செய்யும் முதலாளிகளுக்காக அரசே தொழிற் பேட்டைகளை உருவாக்கித் தருவதுண்டு. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான சாலைப் போக்குவரத்து, மின்சாரம், தண்ணீர் மற்றும் தொழிலாளர் குடியிருப்பு போன்ற அடிப்படைக் கட்டுமான வசதிகளை அரசே ஏற்படுத்திப் பராமரிப்பதும் உண்டு.

அதைப்போன்று இந்த நாட்டுத் தொழில் வளருகிறது, வேலைவாய்ப்பும் அன்னியச் செலாவணியும் பெருகுகிறது என்ற போர்வையில் அந்நிய, ஏகாதிபத்தியப் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்குச் சேவை செய்யும் இந்தியத் தரகு முதலாளிகள் மென்பொருள் தொழில் நடத்துவதற்கான ஒரு தொழிற்பேட்டைதான் இந்த 'டைடல் பார்க்'.

338 கோடி ரூபாய் செலவிட்டு 128 இலட்சம் சதுர அடி பரப்பில் 2000-வது ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்த 'டைடல் பார்க்'கின் நிர்மாணம், பராமரிப்பு, இயக்கம் எல்லாம் பன்னாட்டுத் தொழிற்கழகங்கள், தரகு அதிகார முதலாளிகளின் நிறுவனங்களால் மட்டுமே நடக்கின்றன. இங்கு தொழில் புரிவதற்காகவும் முதலாளிகள், அதிகாரிகள், பணியாளர்கள், உள்நாட்டு - வெளிநாட்டு விருந்தினர்களின் வசதிக்காகவும் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் பிரமிக்கத்தக்கனவாகவே உள்ளன.

**சராசரி இந்தியன் கனவு காணவும் முடியாத ஒரு குட்டி பாரிசு, இலண்டன், சிங்கப்பூர், நியூயார்க், டோக்கியோ நகரில் வாழும் பிரமிக்கத்தக்க அமைப்புகளைக் கொண்டதுதான் இந்த 'டைடல்பார்க்'.**

தடையின்றி மின்சக்தி வழங்குவதற்காகத் தனிச் சிறப்பான துணைமின் நிலையத்தோடு அவசரத் தேவைக்கு 5 மின் உற்பத்தி இயந்திரங்கள். கழிப்பறைகள் உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் மையக் குளிரூட்டும் அமைப்பு. 'டைடல் பார்க்'கின் வண்ணம் குலையாமல் புதுப்பித்துக் கொண்டே இருப்பது, கழிவுகளை அகற்றுவது, புல்தரை செடி கொடிகளைப் பராமரிப்பது, துப்புரவுப் பணிகளைச் செய்வது என்பதற்காகவே மலிவான கூலி கொடுத்து 2000 பேருக்கு மேல் தினமும் உழைக்கிறார்கள்.

மூன்று விதமான தொலைபேசி இணைப்புகள். ''டைடல் பார்க்'' உள்ளே மங்கலான அதேசமயம் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு நிற ஒளி வீச்சைத் தரும் பன்னிறப் பகட்டொளி மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. கட்டிடத்தின் அடித்தளத்திலும், திறந்த வெளியிலும் கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த பரந்த இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ''இசட்'' பிரிவை விடவும் விஞ்சும் பாதுகாப்பு ஏற்பாடு. வளாகத்தின் நுழைவாயில் தொடங்கி அனைத்துப் பகுதிகளிலும் ஒளித்து வைக்கப்பட்டுள்ள ''காமராக்கள்'' கண்காணிக்கும்.

'டைடல் பார்க்' முழுவதும் உள்ளிணைப்புத் தொலைபேசி வசதியோடு, அங்கிருந்து வெளியே பேசுவது பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. இசை, அறிவிப்புகள், கார் அழைப்பு எனப் பல நோக்கங்களுடன் ஒலிபெருக்கி வலைப் பின்னல் அமைக்கப்பட்டுள்ளது. லிஃப்ட் வசதியோடு தானியங்கி மாடிப்படிகளும் உண்டு.

வசதிகள் நிறைந்த ராமச்சந்திரா மருத்துவமனையின் கிளை, அரசுடைமை, தனியார் வங்கிகளின் கிளைகள், தானியங்கிப் பணம் வழங்கும் நிலையங்கள், ஆண்களும் பெண்களும் சேர்ந்தே குளிக்கும் நீச்சல் குளம், அவர்கள் ஆடி மகிழும் அரங்கங்கள், யோகப் பயிற்சி, உள் அரங்க - வெளி அரங்க விளையாட்டுக் கூடங்கள், பன்னாட்டு உணவுகள் பரிமாறப்படும் உணவு விடுதி, வைரம் - பிளாட்டினம் நகைகள் முதல் விலை உயர்ந்த பரிசுப்


படிப்பகம்

www.padippakam.com

பொருட்கள் விற்கும் கடைகள் கம்பெனிகள் வரை தவணை முறையில் சந்தைப் படுத்தும் ஏற்பாடுகள் என்று சராசரி இந்தியன் கனவு காணவும் முடியாத ஒரு குட்டி பாரிசு, இலண்டன், சிங்கப்பூர், நியூயார்க், டோக்கியோ நகரில் வாழும் பிரமிக்கத்தக்க அமைப்புகளைக் கொண்டதுதான் இந்த 'டைடல் பார்க்'.



பள்ளிகள் மாட்டுத் தொழுவங்கள் போலிருக்கும் நாட்டில் டைடல் பார்க்கின் கட்டுமானச் செலவு மட்டும் 338 கோடி ரூபாய்!

செங்கல் சூளை, பட்டாசு - தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தை உழைப்பாளர்களைப் போல, திரும்பத் திரும்ப ஒரே வேலையைத்தான் 'டைடல் பார்க்' பணியாளர்கள் செய்கிறார்கள். ''தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் கல்வி கற்றுள்ள தாங்கள் மாதம் இலட்சக்கணக்கில் சம்பளம் தரும் அமெரிக்காவின் சிலிகான் பள்ளத்தாக்கில் வேலை செய்து, லாஸ்வேகாஸ் நகரில் கேளிக்கை விளையாட்டுக்கள் விளையாடி சொகுசு வாழ்க்கை வாழத் தகுதி படைத்த அறிவாளிகள்; ஏதோ விதிவசமாகவோ தற்காலிகமாகவோ சில ஆயிரம் சம்பளம் வாங்கிக் கொண்டு 'டைடல் பார்க்'கில் வந்து மாட்டிக் கொண்டோம்'' என்று இவர்கள் அலுத்துக் கொள்வதுண்டு.

'டைடல் பார்க்'கில் இருக்கும் பல கம்பெனிகளில் 'கால் சென்டர்' என்று சொல்லப்படும் ஒரு தொழில் முறை பல நிறுவனங்களால் ஏற்று நடத்தப்படுகிறது. மேலை நாடுகளில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களின் சேவைக்காக இணையத்தின் உதவியிலிருந்து, மருத்துவம், வங்கி, கணினித்துறையின் வளர்ச்சி என்று பல விசயங்களுக்காக இந்த கால்சென்டர் நடத்தப்படுகிறது. இந்த கால்சென்டரில் வேலை பார்க்கும் 'நிபுணர்கள்' இரவு நேரப் பணிக்கு வர வேண்டிய கட்டாயத்துக்கு உட்படுகின்றனர்.

பணத்திற்காக இரவு 11 மணி பணிக்கு வரும் இவர்கள் வீடு திரும்பும் போது காலை 10 மணி ஆகிவிடுகிறது. வாய் ஓயாமல் பேசிப் பேசி இவர்கள் இழப்பது தூக்கம் மட்டுமல்ல, அவர்கள் வாழ்க்கையையும்தான். தூக்கம் இயற்கையான ஒரு விஷயம், தூக்கம் வரும்போது தூங்காமல் முழித்து இருந்து வேலை பார்த்துவிட்டுக் காலையில் படுக்கச் செல்லும் இவர்கள் விழிப்பது இரவில் மட்டும்தான். தங்களுடைய எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறோம் என்று சிந்திக்கக் கூட நேரம் இல்லாமல் ஒரு இயந்திரத்தைப் போல் வாழ்கிறார்கள்.

'டைடல் பார்க்'கில் உள்ள ''29'' கம்பெனிகளும் கணினித் துறையில் வேலை பார்க்கிறார்கள். வேலையின் தன்மை, வழிமுறைகள் என்று மாற்றங்கள் அடங்கி இருந்தாலும், அனைவரின் குறிக்கோள் ஒன்றே. பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவை செய்வது, நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுபவர்கள் மட்டும்தான் இங்கு இருக்க முடியும் என்ற நிலையைச் செய்துள்ளார்கள்.



டைடல் பார்க்: அமெரிக்க கனவின் இந்திய யதார்த்தம்.

தொழில் அதிகரிக்க அமெரிக்கா, ஆஸ்டிரியா, ஜெர்மனி போன்ற இடங்களில் இருக்கும் அவர்களுடைய பன்னாட்டு முதலாளிகளை இங்கு இந்தியாவுக்கு வரவேற்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய கலாச்சாரத்தை அறிமுகம் செய்கிறோம் என்று அழகான, நுனி நாக்கு ஆங்கிலம் பேசும் பெண்களை அவர்களுக்கு உதவியாக, ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்காகவே நியமித்துள்ளார்கள். நமது கலாச்சாரத்தை அறிமுகம் செய்ய அவர்களின் கலாச்சாரச் சீர்கேட்டை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

'டைடல் பார்க்'கில் உள்ள எல்லா நிறுவனங்களிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே வேலை செய்கிறார்கள். வேலைக்கான தேர்வு பெண்களின் தோற்றம் - அழகை வைத்தே முக்கியமாக நடக்கிறது. அதனால் பணியில் சேர்ந்த பின்னும் பெண்கள் மேனி அழகைப் பரமரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக அவர்கள் மாதம் இரண்டு, மூன்று முறை அழகு நிலையங்களுக்குப் போய் தம்மை அழகுபடுத்திக் கொள்கிறார்கள். மாத வருவாயில் அதற்காகத் திட்டமிட்டு ஒதுக்குகிறார்கள்.

பல பாணிகளிலான (ஃபாஷன்) விதவிதமாக வடிவமைக்கப்பட்ட ஆடைகளை வாங்கி அடுக்கி வைத்துக் கொள்கிறார்கள். மாற்றி மாற்றிஅணிந்து கொண்டு போய் சக பணியாளர்களையும் ''பாஸ்''களையும் கவனிக்குமாறு செய்கிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும் வார இறுதியில் வரும் வெள்ளி, சனிக்கிழமைகளில் கண்டிப்பாக முறைசாரா (Casuals) நாட்கள் என்ற பெயரில் 'ஜீன்ஸ் பேண்ட்', டி-சட்டைகள் மற்றும் மேலை நாடுகளில் அணியும் பல வகை வகையான ஆடைகளை உடுத்தி வேலைக்கு வருகிறார்கள்.

ஆடை, அலங்காரங்களுக்கு அதி முக்கியத்துவம் தரும் 'டைடல் பார்க்' பெண்கள், சிகை அலங்காரத்திற்கு மட்டும் 1000 முதல் 3000 வரை செலவு செய்கிறார்கள். முக்கியமாகத் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ள பெண்கள், திருமணத்திற்கு ஒருமாதம் முன்பிருந்தே தமது அழகை மேம்படுத்திக் கொள்ளும் பல குறிப்புக்களைச் சேகரித்துக்


படிப்பகம்

www.padippakam.com

கொண்டு, அழகு நிலையங்களுக்குப் போய், பேக்கேஜ் (Pakage) எனப் படும் சில செய்மு றைகளைத் தேவைக் கேற்பச் செய்து கொள்கிறார்கள்.



கால் சென்டர் எனப்படும் சேவை மையங்கள். பணத்திற்காக இரவுப் பணி, அமெரிக்க ஆங்கிலம், இறுதியில் சுயநல நோய் பிடிக்கும் அவல ஆளுமை!

தகவல் தொழில் நுட்பத் துறையில் வேலை பார்க்கும் ஆண்கள் 75% பேர் தங்களுக்கு வரப் போகும் மனை வியை இந்தத் துறை யிலே உள்ளவர் களாகத் தேர்ந்து எடுப்பதில்லை. ஏனென்றால் தன்னைப் போல ஒரு சுயநலவாதி யுடன், போலித்தனங் கள் நிரம்பிய ஒருவருடன் வாழ்வது எவ்வளவு கடினம் என்று அவர்களுக் குத் தெரியும். கிராமங்களிலிருந்தோ, தங்கள் உறவுக்காரப் பெண்களையோ, இல்லை தங்கள் பெற்றோர் பார்த்து முடிவு செய்யும் பெண்களையோ திரும ணம் செய்துகொள்கிறார்கள்.

பல ஆண்கள் தங்கள் குடும்பத்தின் பாரம்பரியம்,கௌரவம் என்று சில வற்றைக் கூறி வரதட்சணை வாங்குகி றார்கள். நகை, பணம் மேல் இருக்கும் வெறியால் பெண்கள் வரதட்சணை கொடுக்கிறார்கள். ஆண்களோ, பெண்களோ தங்கள் திருமணத்துக்கு வரும் சகபணியாளர்களிடம் தங்கள் மதிப்பை அதிகப்படுத்திக் காண்பிக்க வேண்டியே இவ்வாறாகத் திருமணங் களைப் பிரம்மாண்டமாகவும், வரதட்ச ணைகளைக் கொடுத்தும் நிகழ்த்திக் காண்பிக்கிறார்கள்.

இவ்வாறாக எதிர்பார்ப்பும் கவர்ச்சி யும் ஆடம்பரமும் கலந்து திருமணம் நடைபெறுகிறது. இந்த ஆர்வம், திரும ணம் முடிந்து வேலைக்குத் திரும்பும் போது இருப்பதில்லை. பெண்கள் திரு மணம் ஆகி வந்த ஒரு வாரத்திற்கு, தன் னுடைய பலவிதமான குடும்ப அந்தரங் கங்களை ஆண்களும் பெண்களுமாக எல்லோரிடமும் பேசிச் சிரித்து மகிழ்கி றார்கள்.

வெளியூரில் கணவனோ மனை வியோ பிரிந்து பணி ஆற்றி வருவோர் ஒழுக்கம், நம்பிக்கை, உறவுகள் ஆகிய எதையும் ஒரு பொருட்டாக மதிக்கா மல், சுயநலத்திற்காகத் திருமண வாழ்க் கையையே கொச்சைப்படுத்துகிறார் கள். லட்சக்கணக்கில் செலவு செய்து சாதி, சடங்குகளின் அடிப்படையில் நடைபெறும் திருமணங்களை இவர்கள் யாரும் அதன்பிறகு மதிப்பது இல்லை.

பிரிந்து வாழ்பவர்கள் இப்படியென் றால், சேர்ந்து வாழும் கணவன் - மனை வியின் உறவு படு கேவலம். சூரியன் மேற்கே உதித்தாலும் வேலைக்குத் தவ றாமல் வரும் திருமணமான பெண்க ளின் இயல்புக்குக் காரணம் கடமை உணர்வல்ல. வீட்டு வேலை, குழந்தை களைப் பராமரித்தல், உறவினர்கள் வருகை - இவற்றிலிருந்து தப்பிப்பதற் காகவும் மேலும் நாள்தோறும் வேலை நேரங்களில் அரட்டைப் பேச்சுக்கள், விதண்டாவாதச் செயல்களை ஒருநாள் இழக்க வேண்டியிருக்குமே என்ற ஆசையால் மட்டுமே. திருமணத்திற்கு முன் பல விஷயங்களில் தேர்ச்சி பெற்ற இவர்கள் திருமணத் திற்குப் பின் தயார் செய்து கொள்வது விவாகரத்துக்கும் மற்றும் கணவனி டம் சாதுரியமாகப் பேசி ஏமாற்றுவது பற்றிதான்.

**செங்கல் சூளை, பட்டாசு - தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தை உழைப்பாளர்களைப் போல, திரும்பத் திரும்ப ஒரே வேலையைத்தான் 'டைடல் பார்க்' பணியாளர்கள் செய்கிறார்கள்.**

கணவன் மனைவி வேறு துறைகளில் பணிபுரிவோராக இருந்தாலும் அவர் களிடையே நாள் ஓயாமல் சண்டை தான் நடக்கிறது. 'சுயநலம்' மட்டுமே கருதி மற்றவர்களை மதியாமல் வாழத் துணிகிறார்கள். தங்களுடைய கோபம், சந்தோஷம், பாசம் என்று எல்லா உணர்ச்சிகளையும் தங்களோடு பணிபு ரியும் சக ஊழியர்களிடம் மட்டுமே பகிர்ந்திட ஆசைப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களின் சந்தோஷம் தங்களை மட்டுமே முதன்மையாகக் கொண்டு இருப்பதால் வேறு எந்தவித மான பிற உறவுகளுடனும் பகிர்ந்து கொள்ள இவர்கள் தயாராக இல்லை.

காதலன், காதலி என்ற உறவு முறை யில் பழகும் ஆண் பெண்களும் இவ் வாறே ஒரு ஒழுங்கு நெறியின்றி வாழ்கி றார்கள். காதலிக்குத் தெரியாமல் தான் வேலை பார்க்கும் இடத்தில் வேறு பெண்களுடன் உறவு வைத்துள்ள காத லர்களும், காதலனுக்குத் தெரியாமல் தன் நண்பனுடன் ஊர் சுற்றப் (Dating) போகும் காதலிகளின் எண்ணிக்கை இங்கு மிகவும் அதிகம். இது பற்றாமல் போக மேலும் இணையம் மூலம் பல வகையான, வயதான, திருமணமான ஆண் - பெண்களுடன் பேச்சு (chatting) என்ற பெயரில் பழகுகிறார்கள். வெறும் பெயருக்காகக் காதல் என்று வாழும் இவர்கள் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு ஒரு உதாரணமாக வாழ்கிறார்கள்.

அமெரிக்க மாப்பிள்ளை, பெண் வீட்டாரின் சொத்து, சாதி, பணம், படிப்பு, கௌரவம், அந்தஸ்து என்ற பல போலித்தனமான காரணங்களால் இவர்களின் வாழ்க்கை மாறுவதும் உண்டு. காதல் என்ற பெயரில் இவர்கள் நாள்தோறும் அரங்கேற்றிக் கொண்டு இருப்பது ஒழுக்கமின்மையே தவிர வேறு ஒன்றும் இல்லை.


படிப்பகம்

www.padippakam.com

ஆண்களின் பண்பாடு மிகவும் தரக் குறைவாகவே உள்ளது. பெண்கள் அமர்ந்து பணிபுரிந்து கொண்டு இருக்கும் அறை (Cube) என்று அழைக்கக் கூடிய சிறு அறைகளின் மேலிருந்து அவர்களை எட்டிப் பார்த்துப் பேசுவது, தடவிக் கொடுத்துப் பேசுவது, அடித்துக் கிள்ளிப் பேசுவது என்று பணிபுரியும் எல்லா பெண்களிடமும் நடக்க முற்படுகிறார்கள். இதை எதிர்த்து அவர்களைக் காறி உமிழும் ஒழுக்கமும் தைரியமும் சில பெண்களுக்கே உள்ளது. இவர்களின் செயல்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வண்ணம் எதுவும் எதிர்த்துப் பேசாத பெண்கள் இதனைக் கண்டும் காணாமல் இருக்கிறார்கள். ஆண்களையும் பெண்களையும் சுயநலவாதிகளாக மாற்றிய இந்த நிறுவனங்கள் சுரண்டுபவர்களின் சீர்கேடான கலாச்சாரத்தை இவர்களிடம் பயிற்றுவித்துள்ளது.

75% ஆண்கள் ஆணாதிக்கத்தின் சின்னமாக விளங்குகிறார்கள். 20% ஆண்கள் பெண்களிடம் நட்பை இழக்க மனமில்லாமல் அவர்கள் சொல்லுவதற்கு எல்லாம் தலையாட்டி, சிரித்து அவர்களை மகிழ்வித்து தங்கள் காரியங்களை நடத்திக் கொள்கிறார்கள். 5% ஆண்கள் பணம் ஈட்டுவதில் மட்டுமே குறியாக இருந்து அதற்கு எந்தப் பாதிப்பும் வராமல், அதற்கு இடறாக வரும் எதையும் ஏற்காமல் வேலையே உலகம், பணமே சொர்க்கம் என்று வாழ்கிறார்கள்.

பெண்களில் வயதானவர்கள் தங்கள் வயதைக் குறைத்துக் காண்பிப்பதற்காகவே ஆடைகளைக் குறைத்தே அணிகிறார்கள். சிறிய வயதுப் பெண்களைக் காட்டிலும் இவர்கள் உடல் மற்றும் அழகு இரண்டிலும் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். அழகு நிபுணர்களை வரவழைத்து அழகுச் சாதனங்களையும் குறிப்புக்களையும் தயார் செய்து கொள்கிறார்கள். வீட்டில் உள்ள கணவன், குழந்தையின் எதிர்காலம் ஆகியவற்றை முதன்மையாக வைத்து வேலைக்கு வரும் இவர்கள் வெகு சீக்கிரமே அதை மறந்து, அவர்கள் இருப்பதையும் மறந்து, வேலை வேலை என்று பொறுப்புகள் நிறையப் பெற்று சம்பள உயர்வு பெறுவதே இவர்களின் கனவாக இருக்கிறது.

'டைடல் பார்க்'கில் விளம்பரத்துக்காக வரும் பெரும்பாலான பொருட்கள், வாகனங்கள் அனைத்தும் இந்தச் சீர்கேட்டினை அரங்கேற்றும் ஒரு பாலமாக உள்ளது; உதாரணமாக, ஃபோர்டின் கார் கம்பெனி பின்வருமாறு விளம்பரம் செய்கிறது: ''யார் வேண்டுமானாலும் 'டைடல் பார்'க்கை வண்டியில் ஒரு சுற்று சுற்றிவிட்டு வந்து கார் வாங்கலாம்.'' குறைந்த தவணைமுறை, சனிக்கிழமை விருந்துக்குப் போகலாம், டேட்டிங் போகலாம். மானேஜர் ஆகியும் இரண்டு சக்கர வாகன வண்டிகளில் போவது தவறு என்று வாய் கூசாமல் பொய் சொல்லுகிறார்கள் உரிமையாளர்கள்.



ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் கவர்ந்து கொள்ள செலவு செய்வது, அதற்கு சம்பாதிப்பதே டைடல் பார்க்கின் 'அதிஉயர் பண்பு'.

உடனே ஆவேசம் அடைந்த ஆண்கள் தங்கள் பெயர் மற்றும் விலாசத்தைக் கொடுத்துவிட்டு நேராக 'டைடல் பார்க்'கிலுள்ள ஏ.டி.எம். சென்டருக்குச் சென்று பணத்தை எடுத்து முன் பணம் கொடுத்து உடனே பதிவு செய்கிறார்கள். இப்படி எந்த வரைமுறையும் இல்லாமல் எதை வேண்டுமானாலும் வாங்கலாம் என்ற தைரியத்தை இவர்கள் பெற்றுக் கடனாளிகளாக மாறுகிறார்கள். தமக்கு என்று ஒரு பிம்பம் (Image) ஏற்படுத்துவதற்காகவே அவர்களுக்கு இந்தப் பொருட்களின் சேர்க்கை அவசியமாக உள்ளது.

இந்தியாவிலிருந்தவாறே வெளிநாடுகளில் உள்ள குடிமக்கள் மற்றும் நிறுவனங்களின் மருத்துவமனைகளுக்கான ரசீது போடுவது, வகைப்படுத்தும் குறியீடு செய்வது, ஆயுள்காப்பீடு, வங்கி, தணிக்கை, பங்குச் சந்தை மதிப்புக்கள் (Billing, Coding, Insurance, Banking, Auditing, Stock-market Values) மற்றும் உடல்நலத் துறையின் தொழில் நுட்பம் போன்றவற்றை அவர்களுக்கு வழங்குகிறார்கள். எந்த ஊரில் இருப்பவர்களுக்காக இவ்வேலையினைச் செய்கிறார்களோ, அதற்கேற்றவாறு இங்கே வேலை பார்க்கும் ஊழியர்களின் பணி நேரங்களை மாற்றியமைத்துள்ளனர். இதனாலேயே இரவு நேரங்களில் மட்டும் வேலைக்குப் போகும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அந்நாட்டுப் பேச்சுவழக்கங்களுக்கேற்ப நுனி நாக்கில் ஆங்கிலம் பேச வேண்டிய நிர்ப்பந்தமும், பெயரை மேற்கத்தியப் பெயர்களாக அறிவிக்கும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் சேவைத் தொழிலை நடத்துவதற்காக நம்முடைய பொருளாதாரத்தையும் உழைப்பையும் சுரண்டுவது, தன்மானத்தைப் பறிப்பது, கலாச்சாரத்தைச் சீரழிப்பது ஆகியவை இவர்களின் குறிக்கோள்களாக உள்ளன. இவ்வாறு நாடும் தானும் சுரண்டப்படுவதை உணராமல் அற்பக் கலாச்சாரச் சீர்கேட்டில் சிக்கி நம் இளைஞர்கள் வேலை செய்கின்றனர். ஆனாலும் இதைப் பெருமைக்குரிய விசயம் என்று கருதி, தன்னையும் மற்றவர்களையும் மயக்கத்தில் ஆழ்த்துகின்றனர்.

சென்னையில் இருக்கும் அமெரிக்க தூதரகம் இராஜாங்க வேலைகளை கவனிக்கிறது. டைடல் பார்க் சேவை - பண்பாட்டுத் துறை வேலைகளை கவனிக்கும் மற்றுமொரு தூதரகம். எல்லையற்ற நுகர்வு வெறி, பண்டமாகும் பாலுறவு, வெளியே அலங்காரம், உள்ளே பொறாமை, தனிநபர்வாதம் இன்னபிற அமெரிக்க வாழ்க்கையை பயிற்சியளிக்கும் டைடல் பார்க்கை நாம் அறியாவிட்டாலும் அகற்றப் போவது எப்போது?

● ஜென்னி


படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா பழிவாங்கும்!

தனது இருப்பை வெளிக்காட்ட
பகவான் பல அவதாரமெடுப்பதாய்ப் புராணமுண்டு
மீன்... நரசிம்மம்... வராகம்
இப்போது வாஜ்பாய்.

பகவான் இரண்டு அடியில்
உலகை அளந்தான்
வாஜ்பாயோ ஒரே பொய்யில் உலகை அளக்கிறார்,
'இந்தியா ஒளிர்கிறது'

பிள்ளைக் கறி சமைத்து உணவு,
பெண்டாட்டியைக் கூட்டிக் கொடுத்து
அந்நியனுக்கு விருந்து.
என்னடா இது அசிங்கம் என்று
அதிர்ச்சியில் உறைபவர்களை - முதிர்ச்சியோடு
இந்தியா டுடே தவ்லீன் சிங் போல்
ஆற்றுப்படுத்துகிறார் சேக்கிழார்,
சிறுமதியோடு சிவமயத்தைப் பார்க்காதே
உலகளாவிய அவன் திருவடிக்கு முன்னே
உன் ஊன் உடம்பு எம்மாத்திரம்?
முற்றும் துறந்த நிலையில் மூழ்கிப் பார்
"எம்பெருமான் ஈசன் ஒளிர்கிறான்
எங்கணும் சைவம் ஒளிர்கிறது."

உள்நாட்டுத் தொழில்களின்
கழுத்தை அறுத்த கையோடு
இப்போது வாஜ்பாயும் சேர்ந்திசைக்கிறார்
இந்தியா ஒளிர்கிறது.

அமர்நீதி நாயனாரிடம்
தனது கோவணத்தைக் கொடுத்துவிட்டு
அது தொலைந்து போனதற்காய்
அவரிடமுள்ள எல்லாச் செல்வங்களையும்
ஈடாகப் பறித்துக் கொண்டானாம் ஈசன்.

வாஜ்பாய் நாயனாரிடம்
நாம் நாட்டையே ஒப்படைத்தோம்
அவரோ, நம் கோவணத்தையும் விட்டுவைக்கவில்லை.

ஆசையாக வாங்கிய அயல்நாட்டு உணவு வகைகளைத்
தின்றது போகத் தூக்கி எறிய
ஒனிக்ஸ் குப்பைத் தொட்டி இல்லையே என
உலக வங்கியிடம் கடன் கேட்கிறது ஒளிரும் இந்தியா.

தெருவோரத்து ஆயா கடையில்
எட்டணா இட்லிக்கு ஈடு கொடுக்க முடியாமல்
அடிமட்டத்து இந்தியா
அரை வயிற்றோடு இடத்தைக் காலி செய்கிறது;

மாநகர நெடுஞ்சாலையிலோ
காஃபிடே, பிட்சா கார்னர் மேய்ச்சல் காட்டில்
ஊருறங்கும் நேரத்திலும் உட்கார இடம் கிடைக்காமல்
மேட்டுக் குடி இந்தியா காத்துக்கிடக்கிறது.

பார்க்கும் இடமெங்கும்
இரண்டு இந்தியா எதிர்ப்படுகையில்
பொதுவாக இந்தியா ஒளிர்கிறது என்று
பூச்சுற்றலாமா என்றால் -

விவேக்கின் கதாபாத்திர வசனத்துடன்
விடைத்த மூக்குடனும், கூப்பிய கைகளுடனும்
விளம்பரத்தில் நக்கலடிக்கிறார் கவிஞர் வாஜ்பாய்:
"இது ஒரு புரட்சி... இதில்
காஷ்மீர் கன்னியாகுமரியிடம்...
ஹிந்து முசுலீமிடம்...
கிராமம்... நகரத்திடம் கூறுகிறது: ஹலோ!
எத்தனை செல்போன்கள்...
பி.எஸ்.என்.எல். இணைப்புகள், பி.சி.ஓ.க்கள்.
நாங்கள் புதியதோர் இந்தியாவை
எண்ணிப் பார்க்கிறோம்"

எவன் சொன்னது எல்லோர் இந்தியாவும்
ஒளிர்கிறது என்று!
நீங்களாக நினைத்துக் கொண்டால்?
'வரட்டுமா ஹலோ' என்று தொலைபேசியில்
"இலட்சியமே புதிய பாரதம் படைக்க" என
ஓட்டு கேட்க ஓடுகிறார் வாஜ்பாய்.

இந்தியா ஒளிர்கிறது என்ற இரட்டுறமொழிதலைப்
புரிந்து கொள்ள நீங்கள் வெறும்
இந்தியராய் மட்டும் இருந்தால் போதாது
பிரமதரைப் போல கவிஞராகவும் இருக்க வேண்டும்.

வாஜ்பாயியின் வானளாவிய பொய்களால்
ஓசோன் படலத்தில் மட்டும்
ஓட்டை விழவில்லை.
நாடாளுமன்ற ஜனநாயகத்தின்
நான்கு தூண்களிலும் ஓட்டை விழுந்து
உள்ளிருக்கும் முதலாளித்துவச் சர்வாதிகாரத்தின்
முடை நாற்றம் வீசுகிறது.

சீ! என்ன நாறுகிறதே என்று
மூக்கைப் பிடிப்பவர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள்;
ஆகா! என்னமாய் ஒளிர்கிறது என்று
முகரத் தெரிந்தவர்களுக்கு
முதல் இல்லாமலேயே லாபம்.
பின்னே, இந்தியா மட்டுமா ஒளிர்கிறது?
இந்தியா டுடே, தினமணி, தினமலர்...
எல்லாம் சேர்ந்தே ஒளிர்கிறது.
நெல்லுக்கு இறைத்த நீர்
அப்படியே வாஜ்பாய் வழியோடு
கண்ட புல்லுக்கும் போய்விடாமல்
அப்படியே அவர்கள் வர்க்கத்துக்குள்ளேயே
கோடிக்கணக்கில் சாகுபடியாகி
எல்லாப் பத்திரிக்கைகளிலும் இந்தியா ஒளிர்கிறது.

அவர்கள் தனக்காக மட்டும் சிந்திப்பதில்லை
தங்கள் வர்க்கத்துக்காகவும் சிந்திக்கிறார்கள்
என்று கார்ல் மார்க்ஸ் சொன்னதைப்
புரிந்து கொண்டால்
ஒளிரும் இந்தியாவின் பின்னே
ஒளிந்திருக்கும் வர்க்கத்தையும்
புரிந்து கொள்ள முடியும்.



படிப்பகம்

www.padippakam.com



"நாட்டிலுள்ள சாலைகள்
ஒருவரின் கையிலுள்ள ரேகைகள் போன்றவை"

"அப்படி ஒன்று இருந்திருந்தால்
தில்லிக்குக் கொண்டு வரும் வழியிலேயே
என் தங்கை புஷ்பா
தன் இறுதி மூச்சை விட்டிருக்க மாட்டாள்"

"வாடகை வீட்டில் சந்தோஷத்திற்கும்
ஒரு விலை தர வேண்டியிருந்தது"

"ஒவ்வொரு உணவுமணியிலும் எழுதியிருக்கும்
அதைச் சாப்பிடப் போகிறவரின் பெயர்.
ஏழையின் பெயரையும் அவரது பங்கு தானிய மணியில்
யாரோ எழுதிவிட்டார்கள் என்பது
இப்போது நிஜமாகி விட்டது"

- மேற்கண்டவைகள் ஏதோ வெற்றி முரசு கொட்டி
இரண்டாவது வாரமாக ஓடிக் கொண்டிருக்கும்
தமிழ்ச் சினிமாவின்
விளம்பர வாசகங்கள் என்று
நீங்கள் நினைத்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

இரண்டு வாரங்களாக வெற்றிகரமாக
நாடு முழுக்க வாஜ்பாய் ஒட்டிய
"இந்தியா ஒளிர்கிறது" படத்தின்
நறுக்குத் தெறித்த வசனங்கள்தான் இவைகள்.
அதே பத்திரிக்கையின் ஆறாம் பத்தியில்
"குடும்பத்துடன் தொழிலாளி சாவு,
விவசாயி தற்கொலை" என்ற செய்தியில்
யாரும் உறைந்து போயிருக்க மாட்டீர்கள் என்பது
கவிஞர் வாஜ்பாயியின் திமிர்!
தெரிந்தாலும் திரும்பப் பதில் விளம்பரம் கொடுக்க
உங்களுக்குப் பண வசதி கிடையாது என்பது
பிரதமர் வாஜ்பாயியின் நம்பிக்கை!

கட்அவுட்டுக்கு வசனம் எழுதும்
கைத்தொழில் மட்டுமல்லாமல்
கட்சியையே செட்டுபோட்டுக் காண்போரை இழுக்கும்
காட்சி அமைப்பிலும் கவிஞர், கவிஞரே!

மசாலாப் படத்தை விஞ்சும் விளம்பரங்கள்:
ஆதர்ச நாயகன் சிறீராமன்;
அயோத்திச் சண்டைக் காட்சிக்கு
அத்வானி, அசோக்சிங்கல்;
உசுப்பேற்றும் வசனங்களுக்கு உமாபாரதி;
மூர்க்கமான கற்பழிப்புக் காட்சிகளுக்கு குஜராத் மோடி;
கௌரவ வேடத்தில் வாஜ்பாய்;
கலக்கல் காட்சிகளுக்குத்
தெக்கத்தி வில்லன் ராமகோபாலன்.
கண்டிப்பாக இந்தப் படம் ஓடும் என்ற நம்பிக்கையில்
கவர்ச்சியான கதை இல்லாமல்
கால்சீட் இழந்த நடிகைகளின் கடைசித் தேர்வு
இப்போது பாரதிய ஜனதா.

வெத்திலைப் பாக்குப் பொட்டலத்தில்
பத்து ரூபாய் நோட்டை இருப்தாய் மடித்து வைத்து
ஒத்தைத் தலைவலி மண்டையைப் பிளந்தாலும்
வீட்டுக்குப் போய்
ஒரு பூண்டு பல்லைத் தேய்த்து விடலாம் என
பத்து ரூபாய்த் தாளைப் பொத்தி வைக்கும்
விவசாயிகளே
உங்களுக்குத் தெரியுமா?

நானூறு கோடியை இரண்டே வாரத்தில்
இரண்டு வார்த்தைகளுடன் தன்மூஞ்சியைக் காட்ட
செலவு செய்தவர் இந்த நாட்டுக்குப் பிரதமர்.

ஒரு அம்பது ரூபாய் வட்டி கட்டி
அன்றைய வருமானமில்லாமல்
அவமானத்தால் பல குடும்பங்கள் எரியும்போது

'நாடு ஒளிர்கிறது' என்று நானூறு கோடி செலவு செய்து
உங்களால் காட்டுக் கத்தல் கத்த முடியுமா?

என்னால் முடியும் என்று
எல்லாப் பத்திரிக்கைகளிலும் பாசத்தைக் காட்டுகிறார்
வாஜ்பாய்.

உண்மைதான்!
ஐந்து கோடிக்கும் மேல்
இந்திய வேலைவாய்ப்பு அலுவலகத்தில்
பதிவு செய்து காத்திருக்கும் இந்திய இளைஞர்களின்
வேதனைப் பெருமூச்சில்,

ஒருவேளை உணவுக்கும்கூட வழியின்றி
தெருவிலே விசியெறியப்பட்டுள்ள
இருபத்தாறு கோடிக்கும் மேலான ஏழை இந்தியர்களின்
வயிற்றெரிச்சலில்,

இதனினும் கொடுமையாக
பாதிக்கும் மேலாக வேலை இழந்து
பராமரிக்க வழியின்றி
கருவிலேயே கொலை செய்யப்படும்

படிப்பகம்

www.padippakam.com



ஏழை இந்தியர்களின் கர்ப்ப வெப்பத்தில்
இந்தியா ஒளிர்கிறது என்பது
உண்மைதான், உண்மைதான்.

இதனால் வாஜ்பாய்க்கு என்ன இலாபம்
அவருக்குத்தான் குழந்தை இல்லையே என
நீங்கள் வாதாடலாம்!
ஆனால் அவருக்கு வர்க்கம் இருக்கிறதே!
வேண்டுமானால் நெருக்கிப் பிடித்து
அவரைக் கேளுங்கள்
நேர்படவே சொல்வார்.

இந்தியா ஒளிர்கிறது என்றால் அது
எங்கள் இந்தியாவைத்தான், உங்கள் இந்தியாவை அல்ல
என்று உருக்கத்துடன் கவிதை எழுதிக் காண்பிப்பார்,

இந்தியா ஒன்று என்று யார் சொன்னது?
இந்துஸ்தான் லீவர் இந்தியா,
ஹூண்டாய் இந்தியா, ஃபோர்டு இந்தியா,
இப்படி ஏகப்பட்ட இந்தியாக்களை
உருவாக்கி ஒளிர்வதை மறைக்கவில்லை அவர்கள்.

இருவேறு உலகத்து இயற்கை அறியாத அப்பாவிகளே
உங்கள் மண்டையில் உறைக்கும்படி
தாராளமயத்தின் தாசர்கள் தயக்கமில்லாமல்
அறிவிக்கிறார்கள்:
இறக்குமதியாகும் எங்கள் செருப்பை வாங்கும்
சக்தியில்லாதவர்களுக்கு - இனி
இந்த மண்ணில் நடக்க உரிமையில்லை;
உலகளாவிய எங்கள் பொம்மைகளை
வாங்க முடியாத உங்களுக்கு
தாய்மை அடையும் தகுதி இல்லை.
எங்கள் டப்பா உணவை வாங்க முடியாத உங்களுக்கு
நிலம் எதற்கு, நீச்சு எதற்கு?

இவ்வளவு நடந்தாலும்
விளம்பர இந்தியாவின் வெளிச்சத்தில் தடுமாறும்
விவரமறியாத இந்தியர்களா நீங்கள்?
ஒரு கணம் இருண்டு கிடக்கும் இந்தியாவை
ஏறெடுத்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்;
ஆம்! இந்தியா ஒன்றல்ல என்பது
உங்களுக்குத் தெரியாததல்ல.

நம் உயிராதாரமான பிரச்சினை விவசாயம்;
ஆனால், நாட்டில் இயங்க முடியாமல் கிடக்கும்
விளைநிலங்கள் அறுபத்தைந்து சதவீதம்.
நம் மானத்தின் இசை நெசவு;
ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்
ஓசையின்றி ஒடுங்கிக் கிடக்கும் தறிகளின் எண்ணிக்கை
இரண்டு லட்சம்.

வைப்பதற்குத் தீனியில்லை; மேய்ச்சலுக்கு நிலமில்லை;
வாங்கி அய்ந்தாண்டுகளாகியும்
கன்று ஈனாத கறவை மாடுகள்.
இரண்டே ஆண்டுகளில்
இலட்சக்கணக்கில் சினைப்பிடித்து ஓடும் ஹூண்டாய்
கார்கள்.
வருணபகவானுக்கும் ஈரமில்லை;
வாஜ்பாய்க்கோ இதைப்பற்றிச் சிந்திக்க நேரமில்லை;
இருந்தாலும், அடுப்பெரிக்க வழியில்லாத
குடும்பங்களிடம்
அவர் ஆறுதலாகச் சொல்கிறார் ''இந்தியா ஒளிர்கிறது''

குடும்பம் குடும்பமாகக்
கரும்புக் கொல்லையில் வேலை
மாட்டோடு மாடாய் வண்டியை நகர்த்திக் கொண்டு
சர்க்கரை ஆலைக்குப் போனால்
மகாராஷ்டிரத்து விவசாயியோ,
மாயவரத்து விவசாயியோ
அவர்களின் உழைப்புக்கு ஒரே மாதிரி தண்டனை.

ராவும் பகலும் கரும்பு எடுக்கும் வரை
காத்திருக்க வேண்டும் வரிசையில்.
மாட்டின் நிழலில், மூத்திர எருப்பில்.
காத்துக் கிடந்து கரும்பை விற்ற விவசாயிகளுக்கு
ஆண்டுக்கணக்கில் அரசு வைத்திருக்கும் கடன் பாக்கி
300 கோடி
இனிக்க இனிக்கச் செய்யப்படும்
''இந்தியா ஒளிர்கிறது'' விளம்பரத்துக்கு
இரண்டே வாரத்தில் 400 கோடி.

வடக்கிலிருந்து வருவது வாடை,
தெற்கிலிருந்து வருவது தென்றல் என
காற்றுக்கும் வகை பிரித்த கனவான்களே!
வாங்கிய கடனுக்கு வட்டி கட்டி முடியாமல்
ஏங்கித் தவித்துத் தற்கொலை செய்து கொள்ளும்
இந்தியக் கிராமங்களின் பிணவாடை
சுவாசிக்கும் எவனுக்கும் சொந்தமில்லையா?

பசியால் சுட்ட எலும்பாய்
பார்க்குமிடமெல்லாம் கூலித் தொழிலாளிகளின்
குழந்தைகள்.
போதிய தாய்ப்பாலின்றி இறந்துவிடும் எண்ணற்ற
குழந்தைகள்.
இதோ கிராமத்து இந்தியா கருகுகிறது.
நீ வெறும் நுகர்வோன் என்றால் நுகர்ந்து பார்!
மாண்டு போனவர்களுக்காக - அவர்கள்
மாரடிக்கும் சத்தத்தை
உன்னால் கேட்க முடியுமென்றால் கேட்டுப்பார்!

மனையை விற்று, மாட்டை விற்று
இனி மகளையும் விற்றாலே
சோறு திங்க முடியும் என்று
வாழ்வின் எல்லை வரை வந்துவிட்ட குடும்பங்கள்.

நேபாள எல்லையிலே
கடத்திச் செல்லப்படும் சிறுமிகள்
குடலை நிரப்ப உடலை அறுத்துப் போடும் ஓவியங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

காத்துக் கிடந்து கரும்பை விற்ற
விவசாயிகளுக்கு ஆண்டுக்கணக்கில்
அரசு வைத்திருக்கும் கடன்
பாக்கி 300 கோடி இனிக்க இனிக்கச்
செய்யப்படும் "இந்தியா ஒளிர்கிறது"
விளம்பரத்துக்கு இரண்டே
வாரத்தில் 400 கோடி.

பத்தினித் தெய்வங்களுக்கு
இமயத்தில் கல்லெடுத்ததாய்ப் பறைசாற்றும் வீரர்களே
இதோ பெண்களின் இந்தியா சாலையோரம்
பேரம் பேசப்படுகிறது
உங்கள் இதயமே கல்லாய்ப் போனது
இன்னுமொரு சிறப்போ?

வேலை கொடு என்றதைத் தவிர
வேறெந்தத் தப்பும் செய்யவில்லை;
அதற்காகப் போலீசும் ராணுவமும்
மூலைக்கொருவராய் அடித்துத் துவைத்து
முண்டமாய் ஓடவிட்டது அரசு.

இதோ! இளைஞர்களின் இந்தியா
கிழிக்கப்பட்ட ஜட்டியுடனும்
முறிக்கப்பட்ட கால்களுடனும்
உங்கள் முன்னே துடிக்கிறது.

வாங்கும் சக்தியுள்ளவனே
இனி வாழத்தகுந்த இந்தியன்;
ஏங்கும் சக்தியுள்ளவர்களே
இறந்து போங்கள் என -
ஆணையிடுகிறது உலகமயம்.

பத்து சதவீதம் பணக்காரர்களுக்கான இந்தியா -
பகட்டாக ஒளிர்வது மட்டுமல்ல பிரச்சினை.
அவர்கள்தான் மக்கள். அவர்களே தேசம்.
அவர்கள் சிரித்தால் நாடே சிரித்தமாதிரி.
அவர்கள் அழுதால் நாடே அழுதமாதிரி.
சுருங்கச் சொன்னால்,
அவர்களையொத்த வாங்கும் சக்தி இல்லாதவர்களே
மனிதக் குப்பைகளாய் மரித்துப் போங்கள்.

நீயே கடவுள் நீயே சகலமும் என
ஒளிர்கிற இந்தியாவைப் பார்த்து
நம்மையும் கன்னத்தில் போட்டுக் கொள்ளச்
சொல்கின்றன
காட்சி, செய்தி ஊடகங்கள்.

இருண்ட இந்தியாவா? அப்படியா?
எல்லாமே மாறிவிட்டன! எங்கும் புதுமை!
இ.டுடே வகையறாக்கள் என்னமாய் நடிக்கிறார்கள்?
அவர்களுக்கும் சேர்த்து நாம்
அடையாளம் காட்டுவோம்:

அடைப்பெடுத்துக் கொள்ளும்
உங்கள் அரசியல் கழிவறையின்
திறப்பு விழாவிற்குத் திரட்டிக் கொள்ளும்
அரசியல்வாதிகளே!
உங்கள் கழிவறைகளின் தொட்டியில்
கம்ப்யூட்டர் காலத்திலும்
வெறும் கையோடு மூழ்கி எழுந்திருக்கும் - அந்தத்
தொழிலாளர்களின் முகத்தைப் பாருங்கள்
"இந்தியா வழிகிறது."

பருவமடையாத ஏழைச் சிறுமிகள்
ஹைதராபாத்திலிருந்து அரேபிய அறுபதுவயதுக்
கிழவருக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.
பாலியல் குதறலுக்குள்ளான
அவர்களின் படுக்கையறையைப் போய்ப் பாருங்கள்
'இந்தியா மணக்கிறது.'

பத்தொன்பது வயதுக்கு முன்னரே பாலியல் நோய்கள்;
பார்வை இழப்பு, மலிவு விலை மது.
பாஸ்மார்க் வாங்க பள்ளிக்கூடம்
திறக்கக் காசில்லை என்று கையை விரித்து விட்டு
டாஸ்மாக் போடும் திட்டங்கள்
போய்ப் பாருங்கள்
பீர் பாட்டில் வழியே
'இந்தியா பொங்குகிறது.'

இனி, பன்னாட்டுக் கம்பெனிகளின் விதைகளை
புணரத் தெரிந்த புத்திசாலியே விவசாயி;
எல்லா இறக்குமதிகளையும்
நக்கிப் பிழைக்க முடிந்தவனே
நாலும் தெரிந்த குடிமகன்.

பன்னாட்டுக் கம்பெனிகள்
படைத்துத் தள்ளும் பொருட்களை
வாங்கி அனுபவிக்க வக்கில்லாதவன்
தென்னாடுடைய சிவனாயிருந்தாலும்
தீர்த்துக்கட்டு; தேவையில்லை,
இருப்பவனுக்கு இந்தியா ஒளிர்கிறது!
பசப்பில்லாமல் பட்டவர்த்தனமாக
அறிவிக்கிறது அவர்களின் இந்தியா.

இனி இப்படித்தானா? வேறு வழியே இல்லையா?
பக்தி பரிகாரம் எதுவும் பலிக்காது இனி.
ஆட்டு ரத்தத்தை அப்படியே உறிஞ்சிக் குடிக்கும்
பூசாரியால்
ஆளும் வர்க்கத்தின் இரத்தத்தைக் குடிக்க முடியுமா?
அதிர்ஷ்டக்கல் மாட்டிக் கொண்டால்
ஏகாதிபத்திய மலைகள் நொறுங்கிடுமா?

ஒரே வழி -
வெற்றி ரேகை
உழைக்கும் மக்களின்
உள்ளங் கைகளில் ஓடுகிறது,
ஓட்டுப் போடாதே புரட்சி செய்!
மக்கள் சர்வாதிகார மன்றங்களைக்
கட்டியமைப்போம் என்ற
மாற்றுத் திசையில் குவியட்டும் சக்தி!
உலக வங்கி அடிவருடிகளின்
உயிர் வரைக்கும் பறிமுதல் செய்யும்
இயக்கமாய் எழுந்து பாருங்கள்.
இப்போது -
*"இந்தியா பழிவாங்கும்!"*

**• துரை. சண்முகம்.**


படிப்பகம்

www.padippakam.com

# நண்பகற்சூரியனும் நிழலும்

உலகின் வயல்கள் யாவும்
சிறிய உதடுகள் இரண்டுடன் முரண்படுகின்றன
வரலாற்றின் வீதிகள் யாவும்
வெறுங்கால்கள் இரண்டுடன் முரண்படுகின்றன.

அவர்கள் பயணஞ் செய்கின்றனர்
நாங்கள் தங்கி நிற்கிறோம்
தூக்குமரம் அவர்களுக்குரியது
கழுத்துக்கள் எங்களுக்குரியன
முத்துக்கள் அவர்களுக்குரியன
பாலுண்ணிகளும் தோற் பொட்டுக்களும் எங்களுடையன.
இரவும் விடியலும் பிற்பகலும் பகல் வெளிச்சமும்
அவர்களுக்குரியன
தோலும் எலும்பும் எங்களுடையன.

பகற்பொழுதின் சூரிய வெப்பத்தில் நாம் பயிரிடுகிறோம்
நிழலிலிருந்து அவர்கள் உண்கிறார்கள்
அவர்களது பற்கள் அரிசி போல் வெண்மை
எம்முடையவை காடு போற் கருமை
அவர்களது நெஞ்சுகள் பட்டுப்போல் மென்மையானவை
எம்முடையவை தூக்குமரச் சதுக்கங்கள் போல் அழகற்றவை.
எனினும் நாமே உலகின் மன்னர்கள்.

அவர்களுடைய வீடுகளில் வகைப்படுத்தப்பட்ட
கோப்புக்களின் அடுக்குக்கள்
எம்முடையவற்றில் இலையுதிர் காலத்தின் இலைகள்
அவர்களது சட்டைப் பைகளில் திருடர்களதும்
துரோகிகளதும் முகவரிகள் உள்ளன
எம்முடையவற்றில் ஆறுகளும் இடியும் உள்ளன.

சன்னல்கள் அவர்களுக்குரியன
காற்றுக்கள் எங்களுக்குரியன
கப்பல்கள் அவர்களுக்குரியன
அலைகள் எங்களுக்குரியன
பதக்கங்கள் அவர்களுக்குரியன
அழுக்கு எங்களுக்குரியது
சுவர்களும் மாடிமுகப்புக்களும் அவர்களுக்குரியன
கழுத்துத்துணியும் கட்டாரியும் எங்களுக்குரியன.

ஆனாலும், என் அன்பே இப்போது
நாம் நடைபாதையிலேதான் உறங்க வேண்டும்.

*முஹம்மது அல் மஜீத்*
*(ஸிரியா)*

*நன்றி: தாயகம் (செப்'2003)*
*(யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் காலாண்டிதழ்)*



படிப்பகம்

www.padippakam.com













## வே. மதிமாறனின் 'பாரதி'ய ஜனதா பார்ட்டி விமர்சனமும் - விளக்கமும்

**பக். 128** **ரூ.35**

பாரதியின் ஆளுமை பார்ப்பனியமே என்று நிருபித்த மதிமாறனின் நூலை விமரிசித்தும், சரியென விளக்கியும் பல்வேறு பத்திரிக்கைகளில் வந்த - புதிய கலாச்சாரத்தில் தோழர் மருதையன் எழுதிய ''பாரதி அவலம்'' தொடர் கட்டுரையும் உள்ளிட்டு - கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

*வெளியீடு:* **கலகம்,**
1, அப்பாவு கிராமணி தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 2.
தொ.பேசி - 52156320.

## இன்னொன்றைப் பற்றி
*(கவிதைத் தொகுப்பு)*

**பக். 52** **இலங்கை ரூ.100**

உலக அளவில் வரலாறாகும் முக்கிய நிகழ்வுகளின் அரசியலைப் புரிந்து கொள்வதே சிரமமெனும்போது அதைக் கவிதையாக எழுதுவது என்பது எப்போதும் வெற்றியடைவதில்லை. ஆனால் ஈழ அறிஞர் சிவசேகரம் அத்தகைய நிகழ்வுகள் சிலவற்றைக் கவிதையாக்குவதில் தோல்வியடையவில்லை. அரசியல் கவிதை எழுதுவதில் பயிற்சிபெற விரும்புவோர் இத்தகைய கவிதைகளைப் படித்துணருவது பயனளிக்கும்.

*ஆசிரியர்:* **சி. சிவசேகரம்**
*வெளியீடு:* **தேசிய கலை இலக்கியப் பேரவை,**
எண். 44, 3-ஆம் தளம், கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, கொழும்பு - 11,
தொ.பேசி. 335844.

## வடபுலத்து பொதுவுடைமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்

**பக். 170** **இலங்கை ரூ. 200**

இலங்கையில் புதிய ஜனநாயகக் கட்சி எனும் இடதுசாரிக் கட்சியின் பொதுச் செயலாளர் எழுதியிருக்கும் இந்நூலில் யாழ் பகுதியில் பொதுவுடைமை இயக்கத்தின் தோற்றம் முதல் 1980-கள் வரை நடந்த நிகழ்வுகள், போராட்டங்கள், உட்கட்சிப் பிளவுகள், தோழர்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. 1960-களில் நடந்த தீண்டாமை ஒழிப்பு மக்கள் திரள் இயக்கம் பற்றிய செய்திகளும் உண்டு. ஆசிரியரின் அரசியல் பார்வையில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் இலங்கை பொதுவுடைமை இயக்கம் குறித்த சித்திரத்தை ஒரு வரலாற்றுக் கண்ணோட்டமாக எடுத்துரைக்கவில்லை.

*ஆசிரியர்:* **சி.கா. செந்தில்வேல்**
*வெளியீடு:* **புதிய பூமி வெளியீட்டகம்,**
47, 3-வது தளம்,
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி,
கொழும்பு - 11, இலங்கை.

## உலகத் திரைப்பட மேதை அகிரா குரோசாவா

**பக். 320** **ரூ.150**

''எனக்கு விவாதங்களில் ஆர்வம் கிடையாது. கருத்தாக்கங்களைச் சுமந்து திரியும் மனிதர்களை நான் எதிர்கொள்ள விரும்புவதில்லை'' எனும் மறைந்த குரோசாவா 1908 முதல் 1956 வரை தொகுத்திருக்கும் சுய வரலாறே இந்நூல். முதல் 160 பக்கங்கள் குளியலறையில் வழுக்கினார் போன்ற சாதாரண விசயங்களோடும் அதன்பின் அவரது சினிமா அனுபவம், அதுவும் சம்பவங்களாகவே வருகிறது. அகிரா குரோசாவா எனும் சினிமா ஆளுமை எப்படி உருவானது என்ற எதிர்பார்ப்பை இந்நூல் முழுமை செய்யவில்லை.

*ஆசிரியர்:* **அகிரா குரோசாவா**
*தமிழில்:* **இளைய பாரதி - மு. நடராஜன்**
*வெளியீடு:* **புதுமைப்பித்தன் பதிப்பகம்,**
52, முதல் தளம், 4-வது தெரு, அஞ்சுகம் நகர்,
சென்னை - 83.

## சங்கரமடத்துக்குச் சவுக்கடி -
*3 நூல்கள்*

**ஒவ்வொன்றும் 48 பக்கங்கள்**
**ஒவ்வொன்றும் ரூ.10**

இம்மூன்று நூல்களிலும் சங்கர மடத்து மோசடிப் பேர்வழிகளான சங்கராச்சாரிகளை அம்பலப்படுத்திப் பலர் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

*ஆசிரியர்:* **நாத்திகம் பி. இராமசாமி**
*வெளியீடு:* **நாத்திகம்,**
97/55, என்.எஸ். கிருஷ்ணன் சாலை,
கோடம்பாக்கம், சென்னை - 24,
தொ.பேசி: 52134024

## தோட்டாக்கள்
*குஜராத் இனப்படுகொலைகள், கவிதைகளாக...*

**49 கவிதைகள்** **ரூ.60**

நிலநடுக்கத்தைவிடப் பேரழிவை ஏற்படுத்திய பார்ப்பன இந்துமதவெறிப் பாசிசத்தின் குஜராத் இனப் படுகொலைகளினால் பாதிப்படைந்த தமிழ்ப் படைப்பாளிகள் எழுதிய கவிதைகள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. கவிஞர்கள் பலர் பொதுவான மனிதாபிமானத்தை வேண்டி எழுதியிருக்கின்றனர். அந்த மனிதாபிமானம் குஜராத்தின் பெரும்பான்மை 'இந்துக்களிடம்' என்னவாக மாற்றப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளும்போதே நமது மனிதாபிமானம் எதுவென்று தெரியும். ஒவ்வொரு பக்கத்திலும் குஜராத்தின் அந்த மனதைக் குத்தும் காட்சிகள் கூடவே வருகின்றன. பாராட்டத்தக்க முயற்சி.

*தொகுப்பாசிரியர்:* **ஆளூர் ஷாநவாஸ்**
*வெளியீடு:* **'வானம்' வெளியீட்டகம்,**
12, வெங்கடாசல ஆச்சாரி தெரு,
புதுப்பேட்டை, சென்னை - 2,
தொ.பேசி: 32684759.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செனாய்நகர் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/PMG (CCR)/239/03-05
www.padippakam.com











மறுகாலனிய, பார்ப்பனியப் பண்பாட்டு படையெடுப்புக்கெதிரான போர் முழக்கம்

# தமிழ் மக்கள் இசை விழா

பதினொன்றாம் ஆண்டு










படிப்பகம்